விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 16 திங்கட்கிழமை (29.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 131

# தமிழ்க் கூட்டமைப்பை பதிய 2 வார காலக்கெடு

## நான்கு கூட்டுக் கட்சிகள் விடுத்தன

**(கொழும்பு), தமிழ் மக்களின் முக்கிய அரசியல் அணியாக உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தனியான அரசியல் கட்சியாக பதிவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி உடன்பட வேண்டும் என்று அந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய நான்கு தமிழ்க் கட்சிகளும் இரண்டு வார காலக்கெடு விதித்துள்ளன.**

அடுத்துவரும் இரண்டு வார காலத்துக்குள் ஐந்து கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால், தமிழரசுக் கட்சி தவிர்ந்த நான்கு கட்சிகளும் சேர்ந்து தமிழ்த் தேசியத் கூட்டமைப்பாக தம்மைப் பதிவு செய்து கொள்ள முடிபெடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

இதுபற்றி தனது தலைமையிலுள்ள ரெலோ எனப்படும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் மத்திய குழுவிலும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிக் கட்சியாகப் பதியவேண்டுமென்று கூட்டணிக் கட்சிகள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்தும் அதற்கு தமிழரசுக் கட்சி உடன்படவில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சி, ஈபிஆர்எல்எஃப், புளொட், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்துக் கூட்டணிக் கட்சிகளுமே தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற அடிப்படையில் இயங்கி வருகின்றன.

ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யப் (20ஆம் பக்கம் பார்க்க)



சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்து அண்மைக்காலமாக கடும்போக்கு பௌத்த அமைப்புக்கள் முன்னெடுத்துவரும் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்று நடந்த பேரணியை படத்தில் காணலாம்

இந்த இனவாதத்துக்கு எதிரான ஊர்வலத்தை சர்வதேச சதி என்று கூறி ஒரு இடத்தில் ஒரு இளைஞர் குழு தடுக்க முற்பட்டது. ஆனால் அவர்கள் பொலிஸாரால் கலைக்கப்பட்டனர்

## குரோதங்களை ஏற்படுத்தும் இயக்கங்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் முடிந்து அமைதியான சூழல் நிலவி கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில் சில இயக்கங்கள் இனவாதம், மதத்துவேஷம் மற்றும் குரோதங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளரல் நாட்டில் பாரிய இன்னல் தோன்றலாம்.

எனவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயக்கங்களின் செயற்பாடுகளை இல்லாதொழிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் என தென் மாகாண சபை உறுப்பினர் பத்தேகம சமித்த தேரர் தெரிவித்தார்.

"எம்மை நாமே வெற்றியடைதல் ஆயிரம் யுத்தங்களில் வெற்றியடைவதிலும் சிறப்பானது" என்ற தொனிப்பொருளில் ஒருமைப்பாட்டுக்கான பேரணியால் நேற்று முற்பகல் 11 மணியளவில் கொழும்பு தாமரைத் தடாகம் மாவத்தையில் அமைதிப் பேரணி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் போது கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இவ்வாறானதொரு பேரணி மேற்கொள்ளப்பட்டமை சந்தோசமாகவுள்ளது. சில இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் மதத் துவேஷமான குரோதச் செயற்பாடுகளுக்கு நான் இறப்பதற்கு முன் முற்றுப்புள்ளி வைக்க முடியுமா என எண்ணிப் பார்த்தேன்.

ஆனால். இச்செயற்பாடுகளை இல்லாதொழிக்க ஒருமைப்பாட்டுக்கான பேரணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டில் மீண்டும் ஒரு (19ஆம் பக்கம் பார்க்க)

## சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## முகாமிலிருந்து விடுதலை கிடைக்காததால் இளைஞன் தற்கொலை முயற்சி!

செங்கல்பட்டு சிறப்பு முகாமிலிருந்து விடுதலை பெற எடுத்துச் கொண்ட முயற்சிகள் தோல்வியுற்ற நிலையில் சசிதரன் (வயது 21) என்ற இலங்கைத்தமிழ் அகதி ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொள்ள முயன்றுள்ளார்.

இதனிடையே செங்கல்பட்டு முகாமிலுள்ள மூன்று பேர் தங்களை விடுதலை செய்யக்கோரி (19ஆம் பக்கம் பார்க்க)

### பொதுநலவாய அமைச்சரவைக் கூட்டத்தில்

# இலங்கையை காப்பாற்றிய செல்வாக்கு மிக்க நாடு!

(கொழும்பு)

லண்டனில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அமைச்சரவை நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாக-செல்வாக்குமிக்க நாடு ஒன்று செயற்பட்டதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

லண்டனில் உள்ள இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டுள்ள தகவலின்படி, வெள்ளிக்கிழமை கூட்டத்தில் இலங்கையிலிருந்து பொதுநலவாய உச்சி மாநாட்டை இடமாற்றம் செய்யும் விவகாரம் குறித்து ஆராயாமல் தடுப்பதில் இந்த நாடே செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

அமைச்சரவை. நடவடிக்கைக் குழுவில் இந்த நாடு அங்கம் வகிக்கவில்லை என்றும் எனினும் இலங்கைக்கான அந்த நாடு பரப்புரை மேற்கொண்டிருந்ததாகவும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கும் அந்த நாட்டுக்கும் இடையிலான உறவுகள் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையில் இருதரப்பு கலந்துரையாடல்களின் மூலம் உறவுகள் மேலும் முன்னேற்றமடையத் தொடங்கியுள்ளதாகவும் லண்டன் இராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன.

அத்துடன் கேள்விக்குள்ளாகியிருந்த சில கூட்டு திட்டங்களுக்கும் தற்போது புத்துயிர் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் கொழும்பு வாரஇதழ் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நாடு எது என்பதை கொழும்பு ஆங்கில வாரஇதழ் வெளியிடவில்லை.

எனினும்அதுஇந்தியாவாகஇருக்கலாம்என்று கருதப்படுகிறது. (19ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் குடைசாய்ந்ததில் சிப்பாய்கள் 30 பேர் காயம்

இராணுவப் படைச் சிப்பாய்களை ஏற்றிச் சென்ற பஸ் வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் அவ் வண்டியில் பயணித்த 30 பேர் காயமடைந்துள்ளனார்.

இவர்கள் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு விட்டு திரும்பும்போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

May - 01 முதல் எதிர்நீச்சல்



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com, valampurijaffna@gmail.com



## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா (Prima), கிறீன் வலி (Green Vally) & சந்தலங்கா (Sandalanka) 'A' தரமான புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். தொகையான கொள்வனவாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். முன் பதிவு செய்யவும்.



நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 2226944
சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை.
தொ.பே. இல. 077 8996085

(2482)



## First Aid Coordinator (முதலுதவி இணைப்பாளர்) பதவிக்கு ஆட்சேர்ப்பு

சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்டத்தில் முதலுதவி இணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பதாரி ஆங்கில மொழியாற்றலுடன் கணனி அறிவுடையவராகவும் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவராகவும் இருத்தல் வேண்டும். தகுதியுடையோர் 05.05.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கான தொடர்பு இலக்கம்: 021 3214444
24மணிநேர அம்புலன்ஸ்சேவைக்கான இலக்கம்:-0213214444
சென்ஜோன் அம்புலன்ஸ்,யாழ்.மாவட்டம்.

(2480)


## அறிவித்தல்

மானிப்பாய்கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம் - 5, பிடாரிகோயில் வீதி, ஆதன இலக்கம் - 70

வட்டாரம் 05 பிடாரிகோயில் வீதி ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 70 இல் அமைந்துள்ள (உறுதிப்படி: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை 'இந்தியடி' எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்றும் (நில.பர 01 குளி 5.44 கொண்ட ஆதனம்) இவ்வாதனமாது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஆலடியைச் சேர்ந்த நாகதம்பி திருக்குமார் என்பவர்களால் அறுதி உறுதி மூலம் அதே விலாசத்தை சேர்ந்த பாலசுப்பிரமணியம் – பாஸ்கரன் என்பவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் நிறைவேறிய 3323 ஆம் இலக்க 2007.03.24 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் 'இந்தியடி' நிலப்பரப்பு 01 குளி 5.44 சொரியலாக உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் உரிமை கோரப்படாதவிடத்து இவ்வாதனம் பாலசுப்பிரமணியம் – பாஸ்கரன் என்பவர் பெயருக்கு மேற் குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர் : வலி தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்.

(2486)

## 55ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



### நீக்கீலான் மோசெஸ்

(8ஆம் வட்டாரம் மந்துவில், புதுக்குடியிருப்பு)

55ஆவது பிறந்தநாளை 29.04.2013 திங்கட்கிழமை இன்று காணும் எமது குடும்பத் தலைவர் அவர்கள் என்றென்றும் இன்பமுடன் இன்று போல் என்றும் வாழ குழந்தை யேசுவை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
மோ.சறோசாதேவி (மனைவி)
மோ.ஸ்ரெனீபன் (மகன்)
சிறிராகவன் குடும்பம், ரவீந்திரன் குடும்பம், சிறிதரன் குடும்பம்.

(2464)

# மரண அறிவித்தல்கள்

## பேரின்பராஜ் சந்தானலட்சுமி

(முன்னாள் கட்டைவேலி கூட்டுறவுச்சங்க கணக்காளர்)



நெல்லியடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், 6ஆம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான பேரின்பராஜ் சந்தானலட்சுமி 27.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பேரின்பராஜின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை பொன்னம்மாவின் அன்பு மருமகளும், கார்த்தீபன் (Silva @ co), ரவிக்காந்தன் (ஸ்ரீஜெயவர்த்தன பல்கலைக்கழக 2007-ம் ஆண்டு வணிக பீட மாணவன்), பிரவீனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிறேமலதாவின் (Silva @ co) மாமியாரும், ஹரிகேஸின் பேர்த்தியும், சிவக்கொழுந்து (நெல்லியடி), புவனேஸ்வரி (வவுனியா), புனிதவதி (மட்டக்களப்பு), விவேகானந்தன் (பிரான்ஸ்), மகாத்மாகாந்தி (லண்டன்), கேதீஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், குகநாதன் (சுவிஸ்) ஸ்ரீஸ்கந்த கலைவாணி (கரணவாய்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

106, குலோபல் மில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா. T.P. : 0770878087

தகவல் : மகன்
பே.கார்த்தீபன்
பே.ரவிக்காந்தன்

(அ-3132)

## நாகரட்ணம் குமாரகுலசிங்கம்

### (Rtd Depot Inspector CTB)



நவாலியூரைப் பிறப்பிடமாகவும் வட்டு தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் குமாரகுலசிங்கம் (Rtd Depot Inspector CTB) அவர்கள் 28.04.2013 காலை 11.25 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் பரிமளகாந்தியின் அருமைப்புதல்வரும், காலஞ்சென்ற அப்புத்துரை இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், திரவியத்தின் அன்புக்குரிய கணவரும், தாரணியின் (ஆசிரியையா/ விக்ரோறியாக்கல்லூரி, சுழிபுரம்) பாசமிகு தந்தையும் இராச சுந்தரம், தர்மதேவியின் அருமைச் சகோதரரும், அமரர் Dr.இராஜதுரை, இரத்தினசிங்கம், துரைசிங்கம், இரத்தினேஸ்வரி, அமரர் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஷ்ணபாஸ்கரன் தர்மசுந்தரியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 29.04.2013 இன்று அவரது இல்லத்தில் பகல் 12.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளு கின்றோம்.

பங்குரு வீதி , வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.
தொ.பேசி.இல :- 021 321 7821

(அ-3131)

தகவல் :
மனைவி - கு.திரவியம்
மகள் - கு.தாரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அகத்தூய்மை

''எப்போதும் தூய்மையாக இருப்பது தான் நல்லது'' என்று ஒருவர் சொன்னார்.

''நான் அப்படித்தான் சேர் இருக்கிறேன் ! தினமும் மூன்று வேளை சோப்பு போட்டு குளிக்கின்றேன்'' என்றார் இன்னொருவர்.

''உடல் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது சேர்! மனமும் நலமாக இருக்கவேண்டும்'' என்றார்.

''மனதை சுத்தப்படுத்துவதற்கு என்ன சோப் போடலாம்?'' என்று கேட்டார் இவர்.

''ஆன்மீகம்'' என்ற சோப்புதான் அதற்கு பொருத்துமானது. ஆன்மாவை மேம்படுத்துவதற்கு ஒரு முயற்சிதான் ஆன்மீகம்.

அந்த முயற்சியை அடைய என்ன செய்ய வேண்டும்?

மனதினுள் அடைந்துகிடக்கும் வேண்டாத விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டும். முக்கியம் ''பொறாமை'' என்றவரை அதிரடியாக வெளியேற்ற வேண்டும்.

இவர் நமது மனதினுள் குடியிருக்கும் வரைக்கும் நிம்மதியாக இருக்கமுடியாது.

ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரு சீடர்கள் இருந்தார்கள். இந்த இருவரும் ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் தான் பழகிக் கொண்டிருந்தார்கள்.

காலம் கடந்த நிலையில் இந்த இருவரில் ஒருவரது மனதினுள் '' பொறாமை'' என்ற விருந்தாளி அமர்ந்துகொண்டது.

குருநாதரிடம் தான் நல்ல பெயர் பெறவேண்டும். தன் நண்பன் கெட்ட பெயர் கேட்கவேண்டும் என் றொரு நப்பாசை ஏற்பட்டது.

என்ன செய்யலாம் என யோசித்தான்?

ஒரு நாள் விடியற்காலையிலே எழுந்து நேராக குருவிடம் சென்று அவர் முன்னால் நின்று, "குருவே என்னைப் பாருங்கள். நான் எவ்வளவு விரைவாக எழுந்து குளித்து உங்களது வணக்கத் திற்காக காத்து நிற்கிறேன். ஆனால் இவன் இன்னமும் கண்விழிக்கவில்லை. தூங்கிக் கொண்டேவிடியாமுகத்துடன்இருக்கின்றான்" என்று கூறினான்.

குருநாதர் நிமிர்ந்து பார்த்து விட்டு கூறினார்.

" அப்படியா?" அப்படியென்றால் நீயும் அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே என மிகவும் பொறுமையாகச் சொன்னார்.

" என்ன இது - நான் எவ்வளவு தீவிரமான ஒரு விடயத்தை சொல்கின்றேன். நமது குருநாதர் மிகவும்பொறுமையாக இப்படிச்சொல்கிறாரே" என்று மனதினுள் நினைத்தான்.

ஆச்சரியமாக அவரைப் பார்த்தான். அதற்கு குருநாதர் "ஆமாமப்பா... நீயும் தூங்கிக் கொண்டு இருந்திருந்தால், மற்றவர்களை பற்றி குறை சொல்வதற்கு இங்கே முன்வந்திருக்கமாட்டாய் அதனால் தான் அப்படிச் சொன்னேன்?'' என்று கூறினார்.

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் அர்த்தம் புரிந்தது.

"பொறாமை" என்ற விருந்தாளியை மனதிலே இருந்து விரட்டியடித்தான். இப்போது தனது மனம் சுத்தமாக இருப்பதை உணர்ந்து கொண்டான்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நிலஅபகரிப்புக்கு எதிராக வலி.வடக்கில் இன்று போராட்டம்

## த.தே.கூட்டமைப்பு அழைப்பு

நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.எஸ்.சேனாதிராஜா அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்று திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் வலிவடக்கு பிரதேச செயலக முன்றலில் அரசின் நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான சத்தியாக்கிரகப் போராட்டம் இடம் பெறவுள்ளதாக மீளக்குடியேற வேண்டிய மக்கள் அமைப்புக்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டம் தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டமாகும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பூரணமாக இப்போராட்டத்தை ஆதரிக்கின்றது. ஆதரிப்பது மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக இப்போராட்டத்தில் பங்கேற்கும் எனவும் திடசங்கற்பங் கொண்டுள்ளது. அத்துடன் தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறை கொண்ட அனைத்து அரசியற் கட்சியினரையும் சிவில் சமூகத்தினரையும் மனித உரிமை ஆர்வலர்கள் உள்ளிட்ட பல துறைசார் மக்களையும் இவ் வாழ்வுரிமைப் போராட்டத்தில் பங்கு பற்றுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

வலிவடக்கில் இருபத்தாறாயிரம் குடும்பங்கள் சென்ற இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் போர் காரணமாக தங்கள் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

பல ஆயிரம் மக்கள் குடாநாட்டிலேயே அகதிமுகாம்களில் வீழ்ந்து சீரழிகின்றனர். இன்னும் பல ஆயிரம் குடும்பங்கள் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கின்றார்கள். தென்னிந்தியாவில் எண்பதாயிரம் மக்கள் முகாம்களில் தங்கியுள்ளனர். மொத்தமாக இரண்டு இலட்சம் மக்கள் வரை அங்கு இருக்கின்றார்கள். இவர்களில் பத்தாயிரம் மக்கள் வரை வலி.வடக்கில் குடியேறக் காத்திருக்கின்றனர்.

வலிவடக்கில் மீளக்குடியேற்றம் கோரி இதுவரை நூற்றுக்கணக்கான போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. 2009 ஆம் ஆண்டில் முடிந்ததாகக் கூறப்படும் போருக்குப் பின்னரும் பல போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்திலே இராணுவ அக்கிரமிப்பை நீக்கி எம்மக்களை அவரவர் சொந்தக் காணிகளில் குடியேற்ற உத்தரவிடக் கோரி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. 2006 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதியரசர் சரத்.என். சில்வா தலைமையிலர்ன நீதியரசர் குழாம் எம் தமிழ் மக்களை மீளக்குடியேற அனுமதிக்குமாறு சாதகமான ஒரு இடைக்காலத் தீர்ப்பை வழங்கியுள்ளது. 2011 இறுதியில் ஒரு பகுதி மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டனர். இன்னும் முக்கியமாக 24 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்களை மீளக்குடியேற்றுமாறு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஐ.நா.மனித உரிமைப் பேரவையிலும் மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் மீளக் குடியேறவும் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட்ட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் அரசும், இராணுவமும் மக்களின் நீண்ட நாளைய நம்பிக்கைக்கு விரோதமாக, சர்வதேச மற்றும் நீதிமன்ற தீர்மானங்களிற்கு எதிராக அம் மக்களின் சொந்தக் குடியிருப்புக் காணிகளையும், விவசாயக் காணிகளையும் மீன்பிடி பிரதேசங்களையும் வலி. வடக்கில் மட்டும் 6 ஆயிரத்து 400 ஏக்கர் வளமான நிலங்களையும் இராணுவத் தேவைகளுக்காக ஆக்கிரமிக்க அறிவித்தல் கொடுத்திருப்பது பெரும் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இதைவிட வளலாய், இடைக்காடு, வயாவிளான் பிரதேசங்களையும் ஆக்கிரமிக்க அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களிலும் இலட்சக்கணக்கான ஏக்கர் தமிழ்-முஸ்லிம் மக்களின் நிலங்கள் இராணுவத்தேவைக் கென்று அபகரிக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசின் திட்மிட்ட இந் நில ஆக்கிரமிப்பானது தமிழ் இனக்குடிப் பரம்பலைச் சீர்குலைக்கவும், இன அடையாளத்தையே அழித்துவிடவும், மனிதகுலத்து வாழ்வுரிமையைஒழித்துவிடவுமான, உறுதியான நடவடிக்கையாகவே உள்ளது.

இதற்கு நாமெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். இதன் ஒரு கட்டமாக போராட்டத்தின் தொடர்ச்சியாக வலிவடக்கில் நடைபெறவுள்ள சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அனைவரும் அணிதிரண்டு பங்கு கொள்ளுமாறு அழைப்புவிடுக்கின்றோம் என்றுள்ளது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 70-140 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 120 | 80 |
| தக்காளி | 50 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 140 | 120 |
| பூசணி | 30 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 120-150 | 120-160 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | -- | 120 |
| பயற்றங்காய் | 140 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 30 | 80 | 80 |
| கறிமிளகாய் | 70 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 400 |
| போஞ்சி | 80 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 90 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40-50 | 45 | 45-50 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 |

# இராசி பலன்

29.04.2013
(சித்திரை 16, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சதுர்த்தி மாலை 5.17 மணிவரை
கேட்டை முற்பகல்11.44 மணிவரை
இராகுகாலம் 7.28-8.58 மணிவரை
சுபநேரம் 11.58-1.28 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** கணபதியை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காண்பீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையும், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல் அகலும், பயணங்களால் பலனுண்டு, சுப நிகழ்வுகளில் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிங்கம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, உயர் அதிகாரிகள்ள அனுசரித்து செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**விருச்சிகம்** வாக்கு மேன்மையுண்டு, வருங்கால நலன் கருதி வங்கிகளில் சேமிக்க முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் அதிகரிக்கும்நாள், உறவினர் வீட்டு சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்** தனவரவைப் பெருக்கிக்கொள்ள தகுந்த முயற்சிகள் செய்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசிமூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்

**மீனம்** செய்தொழில் மேன்மையுண்டு, மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில்கைகூடும்

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையம்பதியாள் துணை

கோண்டாவில் தில்லையம்பதி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

# திருமண மண்டபம்

## மங்கலகரமான திறப்புவிழா

**இன்று (29.04.2013) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 10.30 மணிவரையுள்ள சுபவேளையில்**

*'திருப்பணிச்செல்வர்'* **முத்தன் இராசன்**

அவர்களின் புதல்வர்

**திரு.திருமதி பிரபாகரன்**

குடும்பத்தினரால் மங்கலகரமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

(2488)

திருக்கோயில் பரிபாலனசபை
தில்லையம்பதி, கோண்டாவில்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணம் அதிகரித்தமைக்காக மக்களுக்கு மானியம் வழங்க வேண்டும்

## கிழக்கு மாகாணத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

(மட்டக்களப்பு)

மின் கட்டண அதிகரிப்பால் அல்லலுறும் மக்களுக்கு மானியம் வழங்க மத்திய அரசாங்கம் அல்லது கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரட்ணம் இப்பிரேரணையை கிழக்கு மாகாண சபையில் முன்வைக்கவுள்ளார்.

மின்கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தே தான் இந்தப் பிரேரணையை முன்வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவால் மின் கட்டண அதிகரிப்பு குறித்து மக்களிடம் கருத்துக் கணிப்பை மேற்கொண்டு கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் மின்சார கட்டணம் அதிகரித்துள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

எமது நாட்டின் 94 வீதமானோர் மின்சாரம் பாவிக்கின்றனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த வருட இறுதிக்குள் 600 மெகாவோட்ஸ் மின்சாரம் இணைக்கப்படுமெனவும் இக்கட்டணங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் குறைக்க வாய்ப்பு உள்ளதாக வும் அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் பாவிப்போரைப் பொறுத்த மட்டில் 30 அலகு பயன்படுத்துவோருக்கு 75 ரூபாய் அதிகரிக்கப்படுகின்றது. 11 இலட்சம் குடும்பங்கள் 30 அலகு வரையில் பயன்படுத்துகின்றார்கள். 60 அலகு பயன்படுத்துவோர் 16 இலட்சம் குடும்பங்கள். 90 அலகுக்கு மேல் பயன்படுத்துவோர் ஐந்து இலட்சத்து 60 ஆயிரம் குடும்பங்களாகும். இக்குடும்பங்களை மின்கட்டண உயர் அதிகமாக பாதிக்கும்.

இதனால் கிழக்கு மாகாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் பொதுமக்கள் பலவழிகளிலும் பாதிக்கப்படுகின்றனர். மக்கள் பாதிக்கப்படும் மத்திய அரசின் இந்தத் தீர்மானத்தை கண்டிப்பதோடும் இப்பாதிப்பிலிருந்து மக்கள் மீள வேண்டுமாயின் உடனடியாக மின்கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும்.

இல்லாத பட்சத்தில் மக்களைப் பாதிப்பிலிருந்து மீட்பதற்கு ஏதாவதொரு சலுகை மானியக் கொடுப்பனவை மத்திய அரசு அல்லது மாகாண சபை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனும் தீர்மானத்தை சபையில் பிரேரணையாகக் கொண்டு செல்லவுள்ளேன் என்றார். (அ-2)

# இலங்கைக்கு சிகரெட் கடத்த முயன்றவர் கைது

டுபாயிலிருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த 230 சிகரெட் பெட்டிகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 5.20 மணியளவில் இலங்கை வந்த யு.எல் 226 விமானத்திலே குறித்த சந்தேக நபர் இந்த சிகரெட்டுக்களை கொண்டு வந்துள்ளார்.

இச்சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி ரூபா 4 இலட்சத்து 6ஆயிரம் என தெரியவருகின்றது.

சந்தேக நபர் 45 வயதுடைய மீகமுவ கொச்சிக்கடை பகுதியை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# மேமாதம் உகண்டாவுக்கு செல்கிறார் மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் மே மாதம் உகண்டாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். உகண்டாவுக்கான ஜனாதிபதியின் குறுகிய பயணம் எப்போது இடம் பெறும் என்று விரைவில் அறிவிக்கப்படும் என ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவரது அழைப்பின் பேரிலேயே மஹிந்த ராஜபக்ஷ கம்பாலா செல்லவுள்ளார். ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த 13 நாடுகளில் உகண்டாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) ஏற்றப்பட்டு வருகின்றது என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அ.எ.ஞானசோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய மே மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை ராணி வீதியிலுள்ள சுகாதார கல்வி மையத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை பழம்வீதி சனசமூக நிலையத்திலும் ஏற்றப்படவுள்ளது.

மறுநாள் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை சிவன்கோவிலடி சிவசக்தி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 1.30 வரை பலாலி வீதி ஆலடிச் சந்தையிலும் வைத்து மேற்படி விலங்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் மே 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை செட்டித் தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்திலும் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை கோவில் வீதி அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு அருகாமையிலும் மறுநாள் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை கோவில் வீதி துர்க்கா மணி மண்டபம் அருகாமையிலும் முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 1.30 மணிவரை கோவில் வீதி சந்தியிலுள்ள பண்டாரக் குளத்தடியிலும் ஏற்றப்படவுள்ளது.

மறுநாள் 8 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் 11 மணிவரை முருகேசர் லேன் சந்தியிலும் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை மணற்றறை லேன் ஜே/103 கிராம சேவகர் அலுவலகத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. மே. 9 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை பலாலி வீதியிலுள்ள சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை செம்மணி வெயிலுகந்த் பிள்ளையார் கோவிலடியிலும் 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை யாக்கோவா பாலர் பாடசாலைகளிலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (அ)

# மாணவர்களின் விடுதலைக்கான சுடர் பயணம் மே மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பின் அடுத்த கட்ட முன்னெடுப்பாக எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை தமிழகத்தின் 32 மாவட்டங்களிலிருந்தும் தமிழீழ விடுதலைக்கான மாணவர் சுடர் பயணம் 8 கோடி தமிழர்களை நோக்கி பயணிக்க இருக்கிறது.

இப்பயணம் இறுதியாக மே மாதம் 17 ஆம் திகதி அன்று தஞ்சாவூரில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் சென்றடைகின்றது. தமிழகத்தின் அனைத்து பகுதியிலிருந்தும் வரும் சுடர்களை பழ. நெடுமாறன் மற்றும் இரா நல்லகண்ணு ஆகியோர் தஞ்சையில் பெற்றுக் கொள்கின்றனர்.

இச் சுடர் பயணத்தின் இரு முதன்மையான நோக்கங்கள்,

எட்டுக் கோடி தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்தும் தமிழக சட்ட மன்ற தீர்மானமான தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பு என்ற கோரிக்கையை இந்திய அரசின் கொள்கையாக அறிவிக்க வலியுறுத்தியும் இத்தீர்மானத்தை இந்தியாவே ஐக்கிய நாடுகள் சபையில் முதன்மையான தீர்மானமாக கொண்டு வர வலியுறுத்தியும்,

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்பதை வலியுறுத்தியும் மாணவர்களால் இச்சுடர் பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மாபெரும் மாணவர் மற்றும் மக்கள் திரள் சுடர் பயணத்தில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பேராதரவு தந்து மாணவர்களுக்கு உந்து சக்தியாக திகழ வேண்டும் என தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு அன்புடன் கேட்டுக் கொண்டுள்ளது. (அ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 1,<br>சூரி, செவ் ஒரே இடத்தில்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L (UK PR)<br>தொ.இ: B -1699 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:25, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்: O/L<br>தையல் மிசின் திருத்துநர்<br>தொ.இ: G -1728 |
| பிறப்பு: 1962 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 31.25<br>தகைமை/ தொழில்:-முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: B -1705 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>உயரம் : 4'8"<br>கி.பா: 27<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G-1731 |
| பிறப்பு: 1980 றோ.க குருகுலம்<br>உயரம்: 6'<br>தகைமை/ தொழில்: BBA Area Manager (NGO)<br>தொ.இ: B -1707 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 38.25, 2 இல் செவ், சூரி<br>தகைமை/ தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G -1734 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: B -1708 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>உயரம்: 5'1"<br>கி.பா: 56, 1இல் சூரி, செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தையல்<br>தொ.இ: G -1735 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்படாத வி.கழகங்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும்

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு தற்போது இயங்காத விளையாட்டுக் கழகங்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படவுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

வடமராட்சி பிரதேச செயலகத்தின் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு தொடர்பாக கழக தலைவர், செயலாளர்களுக்கான விசேட கூட்டம் கடந்த 19ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபதில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமது பிரதேச செயலத்தில் பதிவு செய்யப்பட்ட 48 கழகங்கள் உள்ளன. ஆனால் தற்பொழுது 25 கழகங்களே உரிய முறையில் இயங்கி வருகின்றன. ஏனை யவை பதிவில் இருந்தபோதும் சில கழகங்கள் முற்றாக இயங்காமல் உள்ளன.

இதில் ஏனைய சில கழகங்கள் சீராக இயங்காமல் உள்ளன. இதனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி இயங்காத கழகங்களுக்கும் ஒதுக்கப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் உரிய முறையில் இயங்கும் கழகங்களுக்கு பாராளுமன்ற நிதிகள் இன்மையால் பல சிரமங்களை எதிர் கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

எனவே உரிய முறையில் இயங்காத அனைத்து கழகங்களின் பதிவுகளும் இவ் வருடம் இரத்துச் செய்யப்படும் என பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-24)



நன்றி: மிரர்

# குஞ்சர்கடைப் பகுதியில் கோர விபத்து;12 பேர் காயம்

(கரவெட்டி)

வடமராட்சி குஞ்சர்கடைப்பகுதியில் நடந்த கோர வாகன விபத்தில் இராணுவம், பொது மக்கள் உட்பட 12 பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவது,

வல்வை இராணுவ முகாமிலிருந்து நெல்லியடி நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனமும் பருத்தித்துறையில் இரு ந்து யாழ். நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.ச. பேருந்தும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.



இதில் இ.போ.ச. பேருந்து போக்குவரத்து விதிகளை மீறி வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த இராணுவ வாகனத்துடன் மோதியதால் ஏற்பட்ட இவ் விபத்தில் இ.போ.ச. பேருந்துச் சாரதி மற்றும் அதில் பயணித்த 5 பொதுமக்களும் 7 இராணுவத்தினரும் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் வல்வை இராணுவ முகாமைச் சேர்ந்த மத்துகமே டேவிட் தர்மதிலக (வயது 25) குணரட்ன உப்பாவி (வயது 40), கே.வி. ரம்பண்டார சமித் (வயது 23), விஜயதாசா தென்னக்கோன் (வயது 23), திஸாநாயக்க குமாரா (வயது 25), கருநாயக்க குணவர்த்தன (வயது 20), நந்தசேன ரூவான் பத்திரன (வயது 26). பொதுமக்களில் செல்வராசாரூபி (வயது 25), மார்க்கண்டு ஸ்ரீகாந்தரூபன் (வயது 35), வீரகத்தி மணிவண்ணன் (வயது 38), பரஞ்சோதி அமீரதன் (வயது 28), கமலாதீபன் சாந்தினி (வயது 38) ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச் சம்பவத்தினால் பருத்தித்துறை, யாழ். வீதிப் போக்குவரத்து நீண்ட நேரம் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டது. இது சம்பந்தமாக நெல் லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொ ண்டு வருகின்றனர்.

(அ-3-19-24-60-74)

# மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேக நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன. இதற்கமைய இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.55மணிமுதல் பூசைகளும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்துதலும் 5 மணிக்கு பூசைகளும் நடைபெறவுள்ளதோடு மறுநாள் புதன்கிழமை காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி 9.30 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுப வேளையில் கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது.

அத்துடன் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. இவ் அபிஷேகத்தை செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலய பிரதம குருவிடம் தொடர்பு கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)




# மோதலில் பெண் ஒருவர் காயம்

(கரணவாய்)

எள்ளம்குளம் நாச்சிமார் ஆலயத் தீர்த்தத் திருவிழா அன்னதானத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் பெண்ணொருவர் காயமடைந்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடைய 16 பேர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இதில் தேர்த்திருவிழா உபயகாரர் 11 பேரும் தீர்த்தத்திருவிழா உபயகாரர் 5 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.(அ-3-60)

# சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவு

(கரணவாய்)

வல்வெட்டி வேவில் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் சனிக்கிழமை சனசமூக நிலைய சமாசத் தலைவர் கோ.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக த. தர்சன், செயலாளராக ந.ரெத்தினேஸ்வரன் பொருளாளராக கு. சிந்துஜன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ம.துரைராஜா, மு.கமலரூபன், அ.இராஜசந்திரன், க. மிதுலன் செ. விக்கினேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-60)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக பரிசளிப்பு

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக விளையாட்டு இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன்,நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா, யாழ். மாவட்ட செயலக விளையாட்டு அதிகாரி எம். ஆர்.மோகனதாஸ் ஆகியோர் கலந்து சிறப் பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட செயலக ஓய்வுபெற்ற விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எஸ்.ஜே.ரூபசிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

தடகள விளையாட்டு இறுதி நிகழ்வில் 100 மீற்றர் ஓட்டம், குண்டு எறிதல், 1500 மீற்றர் ஓட்டம், 4×100 அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் வடமராட்சியின் இருபலம் மிக்க அணிகளான கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணி மோதவுள்ளது. (அ-3-24)



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பலதரப்பட்டவர்களுடன் சந்திப்பை ஏற்படுத்தி கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். கடந்த 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட நீதியமைச்சர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதன் பின் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் உள்ளிட்ட சட்டத்தரணிகளையும் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி விஸ்வநாதன் உள்ளிட்ட நீதிபதிகளையும் சந்தித்து கலந்து ரையாடியிருந்தார். இதனையடுத்து யாழில் முஸ்லிம்களையும் நீதியமைச்சர் சந்தித்து கலந்துரையாடினார். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் தமிழர்களை குறிவைத்து தேர்தல் பிரசாரம்

மலேசியாவை பிரிட்டிஷார் ஆட்சிசெய்து வந்த போது இந்தியா, இலங்கை ஆகிய இடங்களில் இருந்து தமிழர்கள் பெரும்பான்மையாக அங்கு குடியமர்த்தப்பட்டனர். பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்து வரும் அவர்களின் எண்ணிக்கை இற்றைவரை சுமார் 10 இலட்சமாக உள்ளது.

எதிர் வரும் மே மாதம் 5 ஆம் திகதி மலேசிய பாராளுமன்றத்திற்கு தேர்தல் நடைபெறவுள்ளது. 222 பாராளுமன்ற தொகுதிகளைக் கொண்டுள்ள மலேசிய பாராளுமன்றத்தில் 60 எம்பிக்களைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழர்கள் விளங்குகிறார்கள்.

இந்நிலையில் அங்குள்ள 30 சதவிகித தமிழர்களின் வாக்குகளைக் குறிவைத்து ஆளும் கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சியினர் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர். தமிழை ஒரு ஆட்சி மொழியாகக் கொண்டுள்ள அங்கு வாக்காளர்களைக் கவர முதன் முதலாகதமிழ் மொழியில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

மேலும் தமிழ் பாடல்கள், நாடகங்கள் மற்றும் இணைய வீடியோக்களையும் அவர் கள் வெளியிட்டு வருகின்றனர். தமிழர்களுக்கு பெரும் ஆதரவாகவுள்ள ஆளும் ஐக்கிய மலாய் தேசிய அமைப்பு கட்சிக்கே இந்த முறையும் தமிழர்கள் வாக்களிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. (அ-2)

# மின்கட்டண சலுகை குறித்து அமைச்சர்கள் அதீத கவனம்

(கொழும்பு)

இப்போது எழுந்துள்ள தீவிர எதிர்ப்புக்கள் காரணமாக அமைச்சரவை அமைச்சர்கள் மின்சார கட்டண சலுகைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்திவருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது இது பற்றி கூறியிருந்தார்.

இந் நிலையில் கடந்த 24 ஆம் திகதி இது தொடர்பான விவாதம் நடத்தப்படவிருந்த போதும், சில அமைச்சர்களின் வருகையின்மையால் விவாதம் நடைபெறவில்லை.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் இது பற்றி தெரிவிக்கையில், மின்சாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி வருகை தராமையால் மின்சார கட்டணம் சலுகை தொடர்பான விவாதம் பிற்போடப்பட்டதுடன் இவ்விவாதம் அடுத்தவாரம் இடம் பெறும் என்றும் கூறினார்.

மின்சார கட்டண உயர்வுக்கு எதிராக பல அமைப்புக்கள் தங்களது எதிர்ப்பை தெரிவித்து வருகின்ற நிலையில், பாராளுமன்றத்திலும் இவ்வாறானதொரு எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அஸாத்சாலிக்கு மீண்டும் விசாரணை

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அஸாத்சாலியை இன்று காலை ஒன்பது மணிக்கு பொலிஸில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தின் நான்காம் மாடியிலுள்ள லசந்த ரத்னாயக்க என்ற பொலிஸ் இன்ஸ்பெக்டரை சந்திக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அஸாத்சாலி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தனது இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை இரகசிய பொலிஸார் தேடுதல் மேற்கொண்டுள்ளனர். இதன் போது என்னைப் பற்றி விசாரித்துள்ளனர். குறிப்பிட்ட நேரத்தில் நான் வீட்டில் இருக்கவில்லை. எனது மனைவியே பொலிஸாரின் கேள்விகளுக்கு பதில் அளித் துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தின் நான்காம் மாடியிலுள்ள லசந்த ரத்னாயக்க என்ற பொலிஸ் இன்ஸ்பெக்டரை சந்திக்குமாறு எழுத்து மூலமான ஒரு குறிப்பை வழங்கி விட்டுச் சென்றுள்ளனர் என்றார். இதேவேளை அஸாத்சாலி நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## புதையல் அகழ்வில் ஈடுபட்ட அறுவர் கைது

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றில் சட்டவிரோதமான முறையில் புதையல் அகழ்வில் ஈடுபட்டிருந்த அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் புதையல் அகழ்வதற்காக வைத்திருந்த பல இயந்திரங்கள், உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இரத்தினபுரி, நீர்கொழும்பு, பலாங்கொடை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# இலங்கை அகதிகள் 88 பேர் தமிழக முகாமுக்கு மாற்றம்

கர்நாடக மாநிலத்தில் கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 88 பேரும் தமிழக முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இரண்டு பேருந்துகள் மூலம் அவர்கள் தமிழக அகதிமுகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர்களில் நான்கு பேர் அகதிகளை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பி வைக்கும் முகவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதான அனைவரும் தமிழகத்தின் பல்வேறு இலங்கை அகதி முகாம்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்த நிலையில், அவர்கள் மீண்டும் அகதி முகாம்களுக்கே மாற்றப்பட்டுள்ளனர். (அ-2)

# 33 விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

காட்சிப்படுத்தப்பட்டுள்ள விலைகளைவிட அதிக விலைக்கு காய்கறி மற்றும் பழ வகைகளை விற்பனை செய்த 33 நவீன சந்தை வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற பல்வேறு முறைப்பாடுகளை அடுத்து நாட்டின் 9 மாவட்டங்களிலுள்ள நவீன சந்தைகளில் அதிகார சபை அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே மேற்படி 33 நவீன சந்தை வியாபார நிலையங்கள் இனங் காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# சிவப்பு மழைக்கும் வேற்றுக்கிரகங்களுக்கும் தொடர்பில்லை

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டின் பல பகுதிகளில் பெய்த பல வர்ணங்களிலான மழைக்கும், வேற்றுக் கிரக உயிரினங்களுக்கும் தொடர்புகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழகத்தின் வேதியல் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் டீ.எல்.ஜயரத்ன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

சிவப்பு மற்றும் பச்சை உள்ளிட்ட நிறங்களில் பெய்த மழை நீரின் மர்திரிகளை கடந்த மூன்று மாதங்களாக சோதனைக்கு உட்படுத்தியதன் அடிப்படையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் கதிர்காமம் மற்றும் அனுராதபுரம் கமுக்கன்வெள ஆகிய பகுதிகளில் சிவப்பு நிறத்திலான மழை பெய்திருந்தது.

அதற்கு முன்னர் ஹற்றன்,ரம்பேவ, கலேன் பிந்துனவெள,வெலிகந்த, திருகோணமலை, மின்னேரியா உள்ளிட்ட பல பிரதேசங்களில் இந்த மழை பெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அலரிமாளிகைக்கு சென்றார் துமிந்த

(கொழும்பு)

கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பாராளுமன்ற உறுப்பினர் துமிந்தசில்வா நேற்றுமுன்தினம் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்.

இவ்வாறு வெளியேறிய அவர், முதலில் அலரி மாளிகைக்குச் சென்றதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

அத்துடன் அவர்,

அன்றைய தினம் முற்பகல் 11.25 மணி சுபவேளையில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியபோது வரவேற்பதற்காக சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் நவலோகா வைத்தியசாலையில் மலர் மாலைகளுடன் கூடி நின்று பட்டாசு கொளுத்தி அவரை வரவேற்றுள்ள னர்.

பலத்த பொலிஸ் மற்றும் பிரத்தியேக பாதுகாப்புக்கு மத்தியில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய துமிந்த, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக அலரி மாளிகைக்கு புறப்பட்டுச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)





சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் சர்வதேச மகளிர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்க உறுப்பினர் ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ரவிகரன் பரிசில் வழங்கி வைப்பதையும் மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நான்தான் மனிதன்



மனித நடமாட்டமே இல்லாத ஒரு காட்டில் ஒரு சிங்கத்தின் ஆட்சியில் எல்லா மிருகங்களும் சுகமாக வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டில் ஒரு மனிதன்கூட அடியெடுத்து வைத்ததில்லை. அதில் ஒருநாள் ஒரு வாத்து தூங்குகையில் ஒரு கனவு கண்டது. அதில் ஒரு மனிதன் அதை மிகவும் அன்புடன் அழைத்தது போலவும் அவனருகில் அது செல்கையில் யாரோ அதன் காதருகே அப்பிராணியருகே செல்லாதே! அது மிகக்கொடியது எனக்கூறியது போலவும் தோன்றியது. அப்போது வாத்து கண்விழித்துக்கொண்டு அக்காட்டிற்குள் பயந்து ஓடியது.

வாத்து வழியில் சிங்கத்தின் குகையில் சிங்கக்குட்டி நிற்பதைக் கண்டது. அச்சிங்கக்குட்டி தன் குகைகைய விட்டு வெளியே அடியெடுத்து வைத்ததில்லை. அதனால் அதற்கு வெளியுலகைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஏனைய மிருகங்களைப் பற்றியும் அறியாது.


## அம்புலிமாமா கதைகள்

வாத்து பயந்து ஓடிவருவது கண்டு அது ஏ! நீ யார்? ஏன் இப்படி ஓடுகிறாய் எனக்கேட்டது. அதற்கு வாத்து இளவரசரே நான் ஒரு வாத்து. நான் கனவில் ஒரு மனிதனைக்கண்டேன். அது ஒரு பயங்கர பிராணி என அப்போது யாரோ என் கனவில் சொல்லவே நான் பயந்து ஓடிக்கொண்டிருக்கிறேன் என்றது.

அது கேட்டு சிங்கக்குட்டி பயப்படாதே. நான் இருக்கின்றேன் எனக்கூறி வாத்தின் முன்னால் நடந்து சென்றது. அதன் பின்னால் வாத்தும் செல்லலாயிற்று.

சிறிது தூரம் சென்றதுமே ஓரிடத்தில் புழுதி கிளம்புவதை அவை பார்த்தன. அதைக்கண்டு சிங்கக்குட்டி அதோ மனிதன் வருகிறான் போலிருக்கிறது. நீ ஒளிந்து கொள். நான் அவனை ஒரு கை பார்க்கிறேன் என்றது. ஆனால் அது அருகே வந்ததும் மானிடன் இல்லை என்றும் வந்தது ஒருகழுதை என்றும் அவை தெரிந்து கொண்டன. சிங்கக்குட்டியோ அது யார் நீ? ஏன் இப்படிப் பயந்து ஓடிவருகிறாய் எனக்கேட் டது. அதற்குக் கழுதை இளவரசே நான் ஒரு கழுதை. மானிடர்கள் என்னைப் படாதபாடு படுத்துகிறார் கள். இனி என்னைக் கண்டால் என் உயிரையே வாங்கி விடுவார்கள் என்றது.

அத்றகுச் சிங்கக்குட்டி நான் இருக்கையில் உனக்குப் பயமேன்? என் பின்னாலேயே வா. அந்த மனிதனை என்ன செய்கிறேன் பார் என்றது. ஆனால் கழுதையோ ஐயோ, நான் வரமாட்டேன். மறுபடியும் மானிடன் கண்ணில் பட்டால் நான் ஒழிந்தே போய்விடுவேன் எனக் கூறிவிட்டு அது ஓடிவிட்டது.



சிறிது தூரத்தில் மீண்டும் தூசி கிளம்பியது. சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு குதிரை வாயில் நுரையைக் கக்கிக்கொண்டு ஓடிவந்தது. சிங்கக்குட்டி அதனையும் நிறுத்தி விசாரிக்க அதுவும் மனிதனால் தனக்கு ஏற்பட்ட இம்சைகளைக் கூறியது.

அப்போது சிங்கக்குட்டி நீ என்னவோ பெரியவனாயும் பலவானாயும் காணப்படுகிறாய். உன்னைவிட மனிதன் பலசாலியோ எனக்கேட்டது. அதற்குக் குதிரை அதில் சந்தேகம் வேறா? என்னைக் கட்டிப்போட்டு தன் இஷ்டப்படி எல்லாம் ஆட்டுவான். நான் இறந்தால்கூட என் தோலை எடுத்து எப்படியாவது உபயோகப்படுத்திக் கொள்வான் என்றது. சிங்கக்குட்டி அதனையும் தன்னுடன் வரச்சொல்லவே அதுவோ தன்னால் வரமுடியாதெனக்கூறி ஓடிவிட்டது.

சிறிது தூரத்தில் ஒரு ஒட்டகம் ஓடிவருவதை சிங்கக்குட்டி கண்டது. அதையும் அது நிறுத்தி விசாரித்துவிட்டு நீங்கள் எல்லாம் ஏன் பயந்து ஓடவேண்டும். தைரியமாக இருங்கள். நான் உங்களைப் பாதுகாக்கிறேன் என்றது. ஆனால் ஒட்டகமும் அதன் பேச்சை ஏற்காது அங்கிருந்து ஓடிவிட்டது.

மனிதனைக்கண்டு பயந்து ஓடும் மிருகங்கள் ஏன் தன் சக்தியின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என அச்சிங்கக்குட்டி யோசித்து ஆச்சரியப்படலாயிற்று. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு கிழவன் அவ்வழியாக வந்தான். அவனது தலை மீது ஒரு தட்டுக்கூடையும் அதில் தச்சுவேலைக்கான பொருட்களும் நீண்ட பலகைகளும் இருந்தன. அவன் சிங்கக்குட்டியைக் கண்டதுமே தன் சுமையை இறக்கிவிட்டு அதற்கு நமஸ்காரம் செய்து வெற்றி அரசே வெற்றி. நூறாண்டு வாழ்வீராக எனக்கூறினான். உடலெல்லாம் சுருக்கம் விழுந்து கிடக்கும் அந்த





விசித்திரப் பிராணியை சிங்கக்குட்டி கண்டு நீ யார்? நீயும் மனிதனைக் கண்டு ஓடுகிறாயா? எனக்கேட்டது. வாத்தோ அந்த மனிதனைக் கண்டதுமே மூர்ச்சையடைந்து விழுந்தது.

அப்போது அவன் நான் ஒரு தச்சன். உங்களிடம் மந்திரியாக இருக்கும் சிறுத்தைப்புலிக்கு வீடு கட்டித் தரவேண்டுமெனக் கூறியதால் இப்போது அதற்காகவே நான் போய்க் கொண்டிருக்கிறேன் என்றான்.

அப்போது சிங்கக்குட்டி முதலில் ராஜகுடும்பத்திற்கே வீடு இல்லையே. மந்திரிக்கு என்ன அவசரமாம். முதலில் எங்களுக்கு ஒரு வீடு கட்டிக்கொடுத்துவிட்டுப் போ என்றது. அப்போது அவன் முதலில் அந்தச் சிறிய வீட்டை கட்டிவிட்டு வருகிறேனே எனக்கூறி தன்னுடைய பொருட்களை எடுக்கலானான்.

ஆனால் சிங்கக்குட்டியோ நான் யார்? தெரியுமா எனக்கூறி தன் கால்களால் அவனை இலேசாகத் தள்ளியது. அவன் உடனே கீழே விழுந்து விட்டான். அவனது பொருட்களும் விழுந்து விட்டன.

உடனே அவனும் சரி உங்கள் இஷ்டப்படியே உங்கள் வீட்டையே முதலில் கட்டுகிறேன் எனக்கூறி மரப்பலகைகளால் அந்தச் சிங்கம் நுழையக்கூடியவாறு ஒரு கூண்டை செய்து அதற்குக் கதவும் அமைத்தான்.

சிங் கக்குட்டி உள்ளே சென்றதுமே சட்டென கதவை மூடி தாளிட்டு விட்டான். பின்னர் அந்தக் கூண்டை நகருக்குள் எடுத்துச் செல்லலானான்.


திடுக்கிட்டுப்போன சிங்கக்குட்டி அவனைப்பார்த்து ஏய்! நீ என்ன செய்கிறாய்.

என்னையா கூண்டுக்குள் அடைத்திருக்கிறாய். நான் யார் தெரியுமா? என் பற்களைப் பார். உன்னைக் கடித்துக் குதறி விடுவேன். என் கால் நகங்களைப் பார். உன் வயிற்றைக்கிழித்து குடலை வெளியே எடுத்துவிடுவேன். மரியாதையாக என்னை விட்டுவிடு என்று கர்ச்சித்தது.

அதற்குக் கிழவன் அடச்சீ சும்மாயிரு! நான் யார் தெரியுமா? நான் மனிதன்.

என்னுடைய மூளைக்கு முன் நீ கால்தூசு. பேசாமல் வா. நீ என்னைப் பார்த்தபோதே ஓடிப் போயிருக்கவேண்டும் எனக்கூறி நகைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

29



தன் பிரிய நண்பன் கனக ராஜனின் இழப்பை சங்கிலியாலும், தன் கணவன் மரணத்தை பரவையாலும் ஜீரணிக்க முடியவில்லை.

இதோ பார் பரவை, கனக ராஜனின் இழப்பு உனக்கும் நாட்டிற்கும் பெரும் இழப்பு. ஆயுதத்தை எடுத்தவன் அதனோடு மரண தேவனையும் கையிலெடுக்கிறான். மறந்து விட்டாயா? மரணம் எல்லாருக்குமானது.

அந்தநேரம்அவ்விடம் வந்த வீரன் அரசனைக்காண தென்னிந்தியாவில் இருந்து ஒரு குழு வந்திருப்பதை அறிவித்தான்.

"வரச் சொல்..."

வந்தவர்கள் தென்னிந்திய வணிகர்கள்.

"மன்னரே தங்கள் காலடிக்கே வணக்கம். நாங்கள் இந்திய வணிகக் குழு. எங்களை வளைஞ்சியர் குழு என்பர்"

## முத்துச் சலாபம்

யாழ்ப்பாண அரசு நிலைகொண்டிருந்த காலத்தில் தென்னிந்தியாவுடன் வர்த்தக உறவு வைத்திருந்தது. சோழமண்டலக்கரை, மலையாளம் ஆகியன முக்கியமான பகுதிகள். அரிசி முதலான தானியங்களும் புடவைகளும் தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகின. யாழ்ப்பாணத்திலிருந்து யானைகள், முத்துகள், சங்குகள், பனம் பொருட்கள் அங்கு எடுத்துச் செல்லப்பட்டன. மன்னார் கடலில் பெறப்பட்ட முத்துகள் காயல் துறை முகத்தில் விற்கப்பட்டன.

"தென்னிந்தியாவுடன் யாழ்ப்பாண அரசருக்கு மிக ஆதியிலிருந்து வர்த்தக உறவுள்ளது. உங்கள் வணிக குழுவான வளைஞ்சியர் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். காயல் பட்டிணத்தில் வளைஞ்சியரிடம் மணிக்கிராமமும் முக்கிய வணிகக் குழுக்களாமே? இப்போது நீங்கள் என்னை நாடி வந்ததன் காரணம் யாது?" என்று மன்னன் கேட்டான்.


"நீங்கள் வணிகக் குழுக்கள் பற்றி நிறையத் தெரிந்துள்ளீர்கள். இப் பருவத்தில் முத்துக்குளிக்க உள்ளீர்கள். நீங்கள் பெறுகின்ற முத்துக்களை இம்முறை வளைஞ்சியருக்கே விற்க வேண்டும். நீங்கள் குறிக்கும் விலையைத் தருவோம்"

மன்னன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"இது வியாபாரம். எங்களது முத்துக்குளிக்கும் முறை தெரியுமா? பிடிக்கின்ற சிப்பிகளில் அரைப்பங்கு மன்னனைச் சாரும். மிகுதி பிடிப்பில் ஈடுப்பட்டவர்களைச் சாரும். அவர்கள் சிப்பிகளாகவே கூறுவிலையில் யார் அதிகம் கேட்கிறார்களோ அவர்களுக்கு விற்றுவிடுவார்கள்... அதை நான் விற்க முடியாது"

"கூறுவிலையில் கேட்கவில்லை. நீங்கள் சிப்பிகளை உடைத்து முத்தாக்கி தரம் பிரித்து விலை மதித்து விற்கிறீர்களே. அதைக் கேட்கிறோம்"

"அப்படியா...? வழக்கமாக என்னிடமிருந்து முத்துக்களை நல்ல விலைக்கு வாங்குவது நெல்லூர் பட்டணத்திலிருந்து அவசிதிப்பையைச் செட்டி ஆவார். அவர் நம்பி வருவார்...அவர் தரும் விலையிலும் கூடுதலாக நீங்கள் விலை கணித்தால் என் பங்கு முத்துக்கள் உங்களுக்குத்தான்...உங்களுடன் போட்டி அவசிதிப்பைச் செட்டிதான்..."




போர்த்துக்கீசர் வசமாக்கப்பட்ட பகுதிகள்

அவர்கள் விடைபெற்றனர். அன்று இரவு மன்னார் அதிகாரி இளஞ்சிங்கன் வந்தான். அவன் வரவை மன்னன் எதிர்பார்த்தான். அதனைக் காட்டிக் கொள்ளவில்லை.

"வாரும் இளஞ்சிங்கம்..."

"இப்போது வைகாசி மாதம் நடக்கிறது. முத்துக்குளிப்பு மாதம், சகல முன் ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன. அதிகாரிகள் தங்குவதற்கான தற்காலிக வீடுகள் இடப்பட்டுள்ளன. கிராம அதிகாரிகள் அவற்றைநிறைவேற்றியுள்ளனர். தேவையான அரிசி வெண்ணெய்... எண்ணெய் முதலிய உணவுப் பொருட்கள் போதியளவு களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளன. முத்துப்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆயிரத்திற்கு மேல்நாவாய்கள் பதிந்துள்ளன. முத்துக் குளிப்பதற்கு

செங்கை ஆழியான்

பட்டங்கட்டிகள் தயார். மண்டைக் கயிற்றினைப் பிடிப்பதற்கான இரண்டு பேரும் தயார். வியாபாரி கள் வரத்தொடங்கிவிட்டார்கள். நீங்கள் நாள் தந்து தொடக்கி வைப்பது தான் தாமதம்..."

"அப்படியா? பதினாறாம் திகதி நாள் குறியும். வருகிறேன்... வேளக்காரர் படையைச் சேர்ந்த இருபது பேரும் முதலாம் படை யணியைச் சேர்ந்த ஐநூறு பேரும் வருவோம் சண்பகமாதாக்கரும் வருவார்..."

"நல்லது அரசே," என்ற இளஞ்சிங்கன் தயங்குவதாகப்பட்டது.

"உன் தயக்கத்திற்கு யாது காரணம்?"

"பெரியதாக ஒன்றுமில்லை. மன்னா, எப்படிச் சொல்வதென்று புரியவில்லை..."

"தயக்கம் வேண்டாம். எதுவாயினும் சொல்..."

(தொடரும்)

---


வருது... வருது... வடமாகாண சபைத்தேர்தல். யாரை முதலமைச்சர வேட்பாளராகப் போடலாம் என்று மூடிய அறைகளுக்குள்ளும், ஊடக வெளிகளிலும் பேசப்படுகிறது. முன்னாள் நீதிபதி சி.வி.விக்னேஸ்வரனா... மாவை சேனாதிராஜாவா... ஈழப்பிரகடனப்புகழ் வரதராஜப் பெருமாளா... இல்லையேல் சந்திரகாசனா என்பதுதான் இப்போது முன்னணியில் இருக்கும் பெயர் விபரம். முன்னாள் உதயன் நாளிதழின் பிரதம ஆசிரியர் வித்தியாதரனின் பெயரை இப்பட்டியலில் காணவில்லை. ஏற்கனவே கூட்டமைப்பைக் கட்சியாகப் பதவி செய்யும் விவகாரத்தில் பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கும் அதன் தலைவர்கள் மத்தியில் தமிழரசுக் கட்சியைச் சோர்ந்த ஒருவரை முதலமைச்சராக நியமித்தால் முரண்பாடுகள் முற்றலாம். இதனால் ஏற்படும் உடைவுகளைத் தவிர்க்க உதவி புரியப்போகிறோம் என்று புறப்பட்டுள்ள சிலர், தாம் விரும்பும் நபர்களின் பெயர்களை முன்மொழிவதாகக் கூறப்படுகிறது.

வரதர், ஹாசனின் பெயர்களை எத்தரப்பு முன்மொழியும் என்பதை ஊகிக்க வேண்டிய அவசியமில்லை. மாவையை தமிழரசுக் கட்சியின் மூத்தகுடிகள் முன்மொழிவார்கள். இங்குள்ள அனைத்துக்கட்சித் தலைவர்களையும் திருப்திப்படுத்தக்கூடிய தெரிவாக சி.வி.விக்னேஸ்வரன் இருப்பார் என்பதுதான் பலரின் கணிப்பு.

அதேவேளை, மணலாற்றில் காணிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வொன்றில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறும் மாதம் எதுவென்று அறிவித்து விட்டார். செப்ரம்பரில் எந்தநாளில் நடத்தவேண்டுமென்பதை தனது நம்பிக்கைக்குரிய சோதிடர்களின் முடிபுக்கு விட்டுவிட்டார்.

அமெரிக்கத் தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள பரிந்துரைகளில் சிங்களத்திற்கு பிரச்சினை தராத விடயம் இத்தேர்தலாக மட்டுமே இருக்க முடியும்.

ஏனெனில், ஒட்டுமொத்த இலங்கைக்கான சிங்களத்தின் இறைமைக்கு 13 ஆவது திருத்தச்சட்டம் இடையூறாக இல்லை என்பதனை ஜே. ஆர். மட்டுமல்ல, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தெரிந்து வைத்துள்ளார். வட- கிழக்கு இணைப்பினை பிரிக்கக்கூடிய வல்லமை சிங்கள



# இடைக்கால நிர்வாகம்கூட கைகளில் கிடைக்குமா? இல்லையா?

இறைமையை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்புச் சட்டத்திற்கு உண்டென்பதையும் அவர்கள் புரிந்துகொண்டுள்ளார்கள்.

இரண்டு தடவைகள் கிழக்கில் ஆட்சி அமைத்த மாகாணசபைகள் காணி, காவல்துறை மற்றும் நிதியைக் கையாளும் உரிமையைப் பெறவில்லை.

அது குறித்து பேச்சுவார்த்தைகளில் தமிழர் தரப்போடு பேசுவதற்கும் அரசு தயாரில்லை. 13 + ஊடாக அது குறித்து பேசி, அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொண்டு, நிரந்தரமான அரசியல் தீர்வொன்றினைக் காணலாமென இந்தியத்தரப்பிற்கு இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகள் எத்தனையோ.

அதனைச் செய்ய வேண்டுமென்கிற அழுத்தத்தினை இந்தியா இதுவரை சிங்களத்திற்குக் கொடுக்கவில்லை என்பது வேறுவிடயம். அப்படிக் கொடுப்பார்கள் என்று காத்திருக்கச் சொல்வது பிராந்திய அரசியலின் சூட்சுமத்தைப் புரியாமல் முன் வைக்கப்படும், இந்தியாவின் இலங்கை சார்புத் தன்மையை மறைமுகமாக நியாயப்படுத்தும் வாதமாக அமைந்துவிடும்.

13ஆவது திருத்தச்சட்டமானது இன அழிவிற்கு உள்ளாகும் இறைமையுள்ள பூர்வீக தமிழ்த்தேசிய இனம் ஒன்றிற்கான இடைக்காலத் தீர்வுமல்ல; நிரந்தரத் தீர்வுமல்ல. முதலில் மாகாணசபை [illegible] கட்டுப்படுத்தப்படுகிறது என்கிற ஒரு விவகாரத்தைப் பார்த்தாலே புரியும். அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றனவா? அல்லது மத்தியில் குவிக்கப்படுகின்றனவா? என்று.

நிதி கையாள்கைக்கு அடுத்ததாக நில உரிமை முக்கியமானது. அன்று கிழக்கினை விழுங்கிய மகாவலி அபிவிருத்தித்திட்டம், இன்று மணலாற்று மண்ணை அபகரிப்பதைப் பார்க்கலாம். ஆகவே, அரச காணிகளுக்கான உரிமை மத்திய அரசின் ஆளுகைக்குள் இருக்கும் போது, மாகாணசபைகளை நகர சபைகள் என்று அழைப்பதில் தவறு இல்லை போல் தெரிகிறது.

உதாரணமாக, கோவில் காணிகளில் உரிமையைப் பாதுகாப்பதில் ஏற்பட்ட மோதல்களை அறிய வேண்டுமாயின், வரதராஜப்பெருமாள் முதலமைச்சராக இருந்த அந்த சொற்ப காலத்தில் மாகாணசபையில் நடந்த, இது குறித்தான விவாதங்களைப் பதிவேட்டில் பார்க்கலாம். அல்லது ஒரு நேர்காணல் மூலம் அவரிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

இப்போது அரசியல் தீர்விற்கான புதிய தெரிவு ஒன்று முன்வைக்கப் பட்டுள்ளது. அது சாத்தியமா? இல்லையா? என்பது குறித்தான ஆரோக்கியமான விவாதங்களை உரையாடவிடாது தடுக்கும் வகையில் சில கருத்துக்கள் எழுந்தமானமாக முன்வைக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

சர்வதேச மேற்பார்வையில் அரசியலமைப்பிற்கு அப்பால் ஒரு இடைக்கால நிர்வாகம் வட- கிழக்கில் நிறுவப்பட வேண்டுமென்கிற கருத்து சிவில் சமூகத்தாலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப்பு ஆண்டகையாலும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களினாலும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியத் தரப்பிடம் முன்வைக்கப்பட்டது.

இன அழிப்பினை தடுப்பதற்காக உடனடியாக முன்வைக்கக்கூடிய மாற்றுவழி இதுவென இவர்கள் நம்புகிறார்கள். எமது பிரச்சினையில் தமது நலன்சார்ந்து அக்கறை கொள்ளும் இந்தியாவிடமும் அமெரிக்காவிடமும் இதனைத் தெரிவிக்கின்றார்கள். தீர்மானங்கள் மூலம் கிடைக்கும் கால அவகாசம் சிங்களத்தின் இன அழிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த உதவும் என்பதுதான் இவர்களின் கணிப்பு.

மன்னார் ஆயரும், கஜேந்திர குமாரும் சட்டத்துறை விரிவுரையாளர் குருபரனும் மக்களால் தெரிவு செய்யப்படாதவர்கள் என்கிற ஒரு காரணத்திற்காக அவர்கள் தமது கருத்தினைத் தெரிவிக்கும் அருகதையற்றவர்கள் என்பது ஜனநாயக மறுப்பாகவே அமையும்.

மக்களால் தெரிவு செய்யப் பட்ட இரா. சம்பந்தனும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. கஜேந்திரகுமாரும் அதனை முற்றுமுழுதாக நிராகரிக்கின்றார். ஒரே ஒரு கேள்வி: தமிழ் மக்களிற்கான அரசியல் தீர்வு 13 ஆவது திருத்தச்சட்டம்தான் என்று கூறி, இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை 87 இல் உருவாக்கிய இந்திய அரசும் ஜே.ஆரும், வட- கிழக்கு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களா?

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார கட்டண உயர்வைக் காட்டி மக்களைத் தவறாக நடத்தாதீர்கள்

## இலங்கை மின்சார சபை தலைவர் வெளியீடு

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்பைக் காரணம் காட்டி பொது மக்களைத் தவறான வழியில் நடத்த சில அரசியல் கட்சிகள் முயற்சிப்பதாக இலங்கை மின்சார சபைத் தலைவர் டபிள்யூ பி.கணேகல குற்றஞ்சாட்டியுள்ளார்.

புதிய மின் கட்டண திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மூன்று வகையான அலகுகளைப் பயன்படுத்தும் 37 இலட்சத்து 28 ஆயிரம் சாதாரண தர பாவனையாளர்களுக்கு முடியுமான அளவு நிவாரணங்களை அரசாங்கம் வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய மின் கட்டண திருத்தங்கள் தொடர்பில் கூறப்படும் கருத்துக்கள் தொடர்பாக ஊடகமொன்றுக்கு தெரிவிக்கையிலேயே இலங்கைக்கு மின்சார சபைத்தலைவர் டபிள்யூ பி.கணேகல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய திருத்தத்தின் மூலம் 37 இலட்சத்து 28 ஆயிரம் சாதாரண தர பாவனையாளர்களுக்கென வருடாந்தம் 26 மில்லியன் ரூபாவை அரசாங்கம் நிவாரணமாக வழங்குகிறது.

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் 94 வீதமான மக்களுக்கு தங்கு தடைகள் எதுவும் இன்றி 24 மணி நேரமும் முழு அளவில் மின்சாரத்தை வழங்கும் ஒரே ஒரு நாடு இலங்கையாகும். இதேபோன்று இவ்வாண்டு இறுதிக்குள் நூறு வீதமான மின்சாரத்தை வழங்குவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

மின் கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளது என்று மக்களை குழப் பத்திற்குள்ளாக்கும் எதிர்க்கட்சிகள், மக்களுக்காக முன்னெடுக்கும் நல்ல விடயங்கள் தொடர்பில் எதனையும் கூறுவதில்லை. எனவே பொதுமக்களை தெளிவுடனும் அவதானத்துடனும் செயற்படுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

சம்பூரில் மின் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிப்பது தொடர்பில் இந்தியாவுடனான பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. வெகு விரைவில் இதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதேபோன்று நுரைச்சோலை அனல் மின் நிலைய உற்பத்தியின் இரண்டாவது கட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையவுள்ளதுடன் அதன் மூன்றாவது கட்ட•நடவடிக்கைகள் இவ்வாண்டு இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜப்பானின் உதவியுடன் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் தற்போது இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த மூன்று திட்டங்களும் முழுமையடைந்தவுடன் பொதுமக்களுக்கு முழுமையான நிவாரணத்தை வழங்க முடியும். ஜே.வி.பியினர் மின் கட்டண உயர்வைப் பற்றி எதிர்ப்பு தெரிவிப்பதற்கோ, பேசுவதற்கோ எந்தவித அருகதையும் இல்லாதவர்கள். 1987-1989 காலப் பகுதிகளில் மின்மாற்றி இயந்திரங்களை சேதப்படுத்தி பெரும் இழப்பை ஏற்படுத்தியவர்கள் அவர்களே.

1977 இல் ஐ.தே.கட்சி மின்சார உற்பத்தி செய்வதற்கான அனுமதியை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கி ஒரு அலகை உற்பத்தி செய்ய சிறிய தொகை செலவான போதிலும் அதற்கு கூடுதலாக விலை கொடுத்ததன் காரணமாகவும் இலங்கை மின்சார சபை நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது என்றார். (அ-2)

# அமெரிக்கா இராஜதந்திர அணுகுமுறையை மீறியுள்ளது

## ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் உள்ளக விடயங்களில் அமெரிக்கா தலையீடு செய்து வருவதாக த நேசன் என்ற இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்செல் சிசன், முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 20 அமைப்புக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

45 நிமிடங்கள் நீடித்த கலந்துரையாடலில் இலங்கையின் நிலவரம் குறித்தும் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள அமைப்புக்களின் வன்முறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.

அத்துடன் திருகோணமலையில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் இலங்கையின் நடைமுறை அரசியல் குறித்தும் அமெரிக்க தூதுவர் கலந்துரையாடியுள்ளார்.

எனினும் அமெரிக்க தூதுவரின் திருகோணமலை விஜயம் தொடர்பில் தமக்கு தெரியாது என்று இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க தூதுவரின் இந்த செயற்பாடு வியன்னா உடன்படிக்கையின் படி இராஜதந்திர அத்துமீறல் சம்பவம் என்று த நேசன் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# எயார்லைன்ஸுக்கு மீண்டும் நிதி ஒதுக்கீடு

இலங்கையில் நட்டங்களை எதிர்நோக்கி வரும் விமான சேவைக்காக அமைச்சரவை மேலும் 315 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்படி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கு புதிதாக 6 விமானங்களும் அரசபாவனைக்காக நான்கு விமானங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன .

ஏற்கனவே ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 13 விமானங்களைக் கொண்டுள்ளது. இதில் 7 விமானங்கள் 10 வருடங்களாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தற்போது 20 பில்லியன் ரூபாய் நடை முறை நட்டத்தில் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ-2)

# இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறைகள் வெளியீடு

## அறிக்கை வடிவில் வெளியிட்டது மன்னிப்புச்சபை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் தீவிரவாதத்தை ஒடுக்க மேற்கொண்ட அச்சுறுத்தல், சித்திரவதை, சிறையடைப்பு, வன்முறை தாக்குதல்கள் என்பவை தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை இந்த வாரத்தில் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளது.

தீவிரவாதம் மீதான தாக்குதல் என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளிவரவுள்ளது.

இலங்கை அரசாங்கம் தமது அதிகாரத்தைக் கொண்டு ஊடகம், எதிர்க்கட்சி போன்றவற்றை அடக்கியது மட்டுமல்லாமல், படையினரின் தீங்கான செயல்களையும் ஊக்குவித்து வந்துள்ளது.

இந்த நிலையில் தமது அறிக்கையில் இலங்கை அரசாங்கத்தின் வாய்மூல, செயல்மூல மற்றும் கொலைகள் தொடர்பில் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# பஹ்ரேன் பாராளுமன்ற குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு

பஹ்ரேன் பாராளுமன்ற தூதுக் குழுவொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. பஹ்ரேன் பாராளுமன்ற சபா நாயகர் கலீபா பின் அஹமட் அல் தஹ்ரானியின் தலைமையிலான இக்குழுவினர் இலங்கை-பஹ் ரேனுக்கிடையிலான நல்லுறவைப் பலப்படுத்தும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இலங்கையுடனான நட்புறவைப் பாராட்டியுள்ள இத்தூதுக் குழுவினர் பாரிய அளவிலான இணைந்த செயற்திட்டங்களுக்கூடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவை மேலும் பலப்படுத்துவதே தமது எதிர் பார்ப்பு என இவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறியுள்ளனர் . (அ-2)

# தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ்த் தினப்போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்க ளைப் பெற்ற மாணவர்களது விபரம் வருமாறு,

**ஆக்கம்**

ச.சாருண்யா (கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை), வ. நிரோஜன்(வரணி வடக்கு அ.த.க. பாடசாலை),பா.கோபிகா (மட்டுவில் அ.மி.த.க.பா.)

**கட்டுரை வரைதல்-I**

க.கவீனா(மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), ப.சுகிர்தன் (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), யோ. வைஸ்ணவி (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்.

**கட்டுரை வரைதல்-II**

ஸ்ரீ.வினுஜா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), இ. அனற் சுதர்சிகா(மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை), ச. கிறிஸ்துஜா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி),

**கட்டுரை வரைதலும்-இலக்கியம் நயத்தலும்**

வே. கோகிலன் (வரணி மகா வித்தியாலயம்), சி.சோபனா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.கீர்த்தனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**தமிழியற் கட்டுரை வரைதலும் இலக்கியம் நயத்தலும்**

ப.சுஜீபன் (வரணி மகாவித்தியாலயம்), வி. துலக்ஷி(கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), செ. கீர்த்தனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**இலக்கணப் போட்டி-I**

கு. கௌசிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தி.கிருஷாந்தி (மீசாலை வீரசிங்கம்மத்தியகல்லூரி),சு.துர்க்கா(உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்),

**இலக்கணம்-II**

த. கஜந்தினி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), ப.சந்வோதினி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்),சு.சுஜிபன்(வரணிமகா வித்தியாலயம்).

**கவிதை ஆக்கம்-I**

பா. ஜெனித்தா (மட்டுவில் சந்திர புர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்), கு. சிந்தூரியா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கு. வாசுகி (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)

**கவிதை ஆக்கம்-II**

பி. பிரேமிஷா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஸ்ரீ.நிரேகா( உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), ஸ்.லீன் (நாவற்குழி மகா வித்தியாலயம்)

**சிறுகதை ஆக்கம்-I**

சி. சரண்யா (மட்டுவில் சந்திர மௌலீசா வித்தியாலயம்), த. அபிராமி (நாவற்குழி மகா வித்தியாலயம்), க.கஸ்மி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

**திறனாய்வுப் போட்டி**


ஞா. கார்த்திகா (வரணி மகா வித்தியாலயம்), ர. அனுசாளினி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்),

**குறுநாடக ஆக்கம்-I**

ஆ.கிருஷாந்தினி (உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்), வ. வினோஜா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), வி. நிஷாந்தினி (மட்டுவில் அ.த.க.பாடசாலை).

**குறுநாடக ஆக்கம்-II**

அ.கார்த்திகா(வரணி மகாவித்தியாலயம்), து. துஷானா (கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்), ச.ஆர்த்திகா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்). (அ-29)



கோண்டாவில் உப தபாலக புதிய கட்டட திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வின்போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் வடக்கு மற்றும் வட மத்திய மாகாண பிரதி தபால் மா அதிபதி மங்கல விளக்கு ஏற்றுவதையும் புதிய அலுவலகத்தை விருந்தினர்கள் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதிக்கான உயர்ரக அரிசியை உற்பத்தி செய்ய ஜனாதிபதி பணிப்பு

அரிசி உற்பத்தியில் நாடு தன்னிறைவு கண்டுள்ள நிலையில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் உயர்ந்த ரக அரிசியை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மகாவலி வலயம் உட்பட நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உயர்ந்த ரக நெல்லை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சில் நடைபெற்ற நிகழ்வொன்றில் நீர்ப்பாசன மற்றும் விவசாயத்துறை அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, நிமல் சிறிபாலடி சில்வா உட்பட அமைச்சர்கள், துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் விவசாயிகள் எதிர்நோக்கம் பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.



விவசாயிகளின் காணிப் பிரச்சினைகள், விவசாயத்துக்கான நீரைப் பெற்றுக் கொடுப்பதில் எழுந்துள்ள பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவற்றில் சில பிரச்சினைக்கு உடனடித் தீர்வைப் பெற்றுக் கொடுத்த ஜனாதிபதி சில பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழிகாட்டல்களை வழங்கியுள்ளார். (அ-5)

# என்ன விலை கொடுத்தேனும் பயங்கரவாதம் அகற்றப்படவேண்டும்

## அமெரிக்கா அதனை உணர வேண்டும் என்கிறார் சவேந்திர சில்வா

பயங்கரவாதம் எதுவாக இருந்தாலும் எங்கிருந்து வந்தாலும் அது கட்டாயமாக வெளியேற்றப்பட வேண்டும் என்பதை அமெரிக்காவும் ஏனைய மேற்கத்தேய நாடுகளும் உணர வேண்டும் என்று இலங்கை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் நியூயோர்க்குக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதம் என்ன விலை கொடுத்தேனும் அகற்றப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேசிய வானொலியில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், பொஸ்டனில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலைப் போலவே இலங்கையில் விடுதலைப் புலிகளும் தாக்குதல்களை நடத்தினர்.

படைவீரர்கள் ஒரு நாட்டின் மக்களைப் பாதுகாப்பதற்காகவே சேவையாற்றுகின்றனர். இந்நிலையில் இலங்கையில் படை வீரர்கள் பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டை பாதுகாத்துள்ளனர். இதன்போது சரணடைந்த விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அவர்களை மீண்டும் பிழையான வழிக்கு இட்டுச்செல்ல சிலர் முயற்சிப்பதாக சவேந்திர சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்குகிழக்கில் இன்னும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு வரும் நிலையில் பல்வேறு நோக்கங்களைக் கொண்டு படையினர் அங்கு நிலை கொண்டிருப்பது பிரச்சினையான விடயம் அல்ல என்றும் சவேந்திர சில்வா சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# துமிந்த சில்வாவின் விடுதலை நீதித்துறைக்கு அச்சுறுத்தல்!

## ஹிருணிக்கா தெரிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் விடுதலையானது இலங்கையில் நீதித்துறை பிழையாக வழிநடத்தப்படுகின்றமைக்கான சான்றாக அமைந்துள்ளது என்று கொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரதலக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிக்கா குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் நடைமுறை அரசாங்கத்தின் சட்டம் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே துமிந்தசில்வாவினால் கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தமது தந்தையான பாரதலக்ஸ்மனின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் துமிந்த சில்வாவின் விடுதலை மேலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஹிருணிக்கா குறிப்பிட்டுள்ளார்.

சட்டக் கல்லூரியின் மாணவி என்ற நிலையில் இது நாட்டின் நீதித்துறைக்கு அச்சுறுத்தலான விடயம் என்றும் ஹிருணிக்கா சுட்டிக் காட்டியுள்ளார்.

நீதிமன்றத்தில் இன்னும் துமிந்தசில்வா முழுமையாக குணமடையவில்லை என்று கூறப்பட்டது.

மேலும் பாரிய சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்பட்ட துமிந்தசில்வா நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் இருந்து வெளியேறியபோது, சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதான எவ்வித உடல் நிலை மாற்றங்களுமின்றி அவர் வெளியேறியதைக் காணமுடிந்தது என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# பிரபாகரன் செய்யாததை அரசாங்கம் செய்கிறது

## ஐ. தேசிய கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு 40 ஆளும் கட்சி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்து வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 40 அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளனர்.

இதற்கு மேலதிகமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு தாவிய சில பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள். ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த சந்திரிகாவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு மக்கள் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையுமே கோரி வருவதாகவும் இந்த அரசாங்கம் மீது நம்பிக்கையின்றி வாழ்கின்றனர் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விடவும் வடக்கில் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மக்கள் கோருவதனையே நாம் வழங்க வேண்டும். வடக்கு மக்களின் தற்போதைய வாழ்க்கை குறித்து நாம் திருப்தி அடைய முடியாது.

ஏனெனில் நிவாரணங்கள் இன்றி இயல்பாக வாழக்கூடிய பின்னணி இன்னமும் உருவாக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

30 ஆண்டுகள் போர் நீடித்திருந்தாலும் பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை. பிரபாகரன் பொருளாதாரத்தை வீழ்த்தவில்லை. பிரபாகரன் செய்யாததனை இந்த அரசாங்கம் செய்துள்ளது.

தற்போது நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே உண்டு என அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# இசை மற்றும் கலை அம்சங்களை எல்லோரும் கற்றுத் தேற வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு


எமது இனத்தின் பாரம்பரிய இசை மற்றும் கலை அம்சங்கள் பரம்பரை பரம்பரையாக ஒரு வரையறுக்கப்பட்ட சமூகத்திற்குள் மட்டுமே செல்வாக்கு செலுத்துகின்றன என பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ். இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில்நேற்று முன்தினம்ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது இனத்திற்கே உரித்தான பாரம்பரிய இசை மற்றும் கலை அம்சங்கள் பரம்பரையாக பின்பற்றி வருகின்ற ஒரு குறிக்கப்பட்ட சமூகத்திற்குள் மட்டுமே செல்வாக்கு செலுத்திவருகின்றன.

எனவே இந்த நிலைமை மாற்றப்படல் வேண்டும். அதன் மூலம் சமூகத்தில் எல்லா மட்டங்களிலும் கொண்டு செல்லப்பட்டு வளர்க்கப்படும் போதே சமூகத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடியும். குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் எங்களுடைய பாரம்பரிய கலைகளைக் கொண்டு செல்லல் அவசியமாகிறது. இதன் மூலம் சமூக பிறழ்வுக்குள் செல்கின்ற இளைய தலைமுறையினரை மாற்றி கட்டுக் கோப்புள்ள நல்ல சமுதாயமாக மாற்ற முடியும். எனவே பாரம்பரியம்மிக்க இவ்வாறான கலைகள் சமூகத்தில் பரவலாக்கப்படல் காலத்தின் தேவையாகின்றது எனவும் வலியுறுத்தினார்.


தற்போதைய சூழலில் எங்களிடம் இதற்கான வளங்கள் நிறைவாகவே உள்ளன. யாழ்ப்பாணம், மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி உருவாக்கியுள்ள நுண்கலை பட்டதாரிகள் இதற்கு போதுமான தாகவே உள்ளனர். இவர்களைக் கொண்டு பாடசாலை மட்டத்திலிருந்து இவ்வாறான கலைகளை உருவாக்க வேண்டும் என்பதோடு, எமது கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பாதுகாத்து வளர்க்கும் சமூகமாக நாம் மாறவேண்டும். அப்போதுதான் மழுங்கடிக்கப்படுகின்ற அல்லது மறக்கப்படுகின்ற எமது பண்பாட்டு கலை அம்சங்களைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க முடியும் என்றார். (அ-2)



யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் மாணவர் முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டு விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயபூமியை எண்ணி இதயங்கள் அழுவது இன்றும் தொடர்கிறது!



**“நாட்டின் ஜனாதிபதியே தமிழருக்குச் சொந்தமான காணிகளைப் பறித்து எங்கிருந்தோ வந்த சிங்கள மக்களிடம் ஒப்படைத்திருப்பது மிகப்பெரிய கொடுமை”**
**“மணலாறு கிராமத்தில் நிம்மதியுடனும், வசதியுடனும் நாம் வாழ்ந்தோம்; எங்கள் விவசாயக்காணிகள் அனைத்தும் சிங்களவருக்கே வழங்கப்பட்டுள்ளன...”**
**“நாம் அடந்த காட்டுப்பகுதிக்குள் எவ்வித அடிப்படை வசதியுமற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்... எம்து உரிமைகளுக்காக போராடி வருகின்றோம்”**

மட்டக்களப்பு மாவட்டம் தமிழர் செறிந்து வாழும் பகுதி. கிழக்கு மாகாண சபைத்தேர்தலின்போது மட்டக்களப்பு மாவட்டம் முக்கிய பங்கு வகித்தது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அங்குபடுதோல்விஅடையும்என்றே அரசு தரப்பால் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்மக்கள் அரசுக்கு தமது எதிர்ப் பைத் தெரிவித்ததற்காக கூட்டமைப்பிற்கே வாக்களித்தனர்.

ஆனால், கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை அரசாங்கம் இழக்கவிருந்த நிலையில் மோசமான தந்திரங்களை அது கையாண்டு ஆட்சியைக் கைப்பற்றியது. வெற்றிக்கான உத்தரவாதமற்ற நிலையைத் தவிர்ப்பதற்காகவே அரசு, மட்டக்களப்பு மாவட்டத்தின் குடிப்பரம்பலை மாற்றத் திட்டம் வகுத்துள்ளது.

வாகரை செங்கலடி, பட்டிப்பழை, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் 115 ஏக்கர் தமிழர் காணிகளை அபகரிக்க இராணுவம் திட்டமிட்டுள்ளது. காணிகளைப் பெற்று அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் முனைப்புக்காட்டி வருகின்றது.

மணலாறு என்ற அழகிய தமிழ்க் கிராமம்; கிட்டத்தட்ட வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் இதயப் பகுதி; இது தமிழர்களின் இதயபூமி என்றும் அழைக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு வரை பரம்பரை பரம்பரையாக தமிழர்கள் இங்கு நிம்மதியாக வாழ்ந்துவந்தனர். சுமார் 7 கிராம சேவகர் பிரிவுகள், தமிழ்ப் பாடசாலைகள், சந்தைகள், கடைகள், கோயில்கள் என தமிழ் மணம் வீசும் கிராமமாக அது திகழ்ந்தது.

1984 ஆம் ஆண்டு இராணுவம் இங்கு புகுந்து முகாம் அமைத்தது. தமிழர்கள் அங்கிருந்து வேறுபகுதிகளுக்குத் துரத்தப்பட்டு அகதிகளாக அலைந்து, அதன்பின்னர், மீண்டும் அங்கு வந்து குடியேறினர்.

மணலாறு, முல்லைத்தீவு மாவட்டத்துடனேயே எப்போதும் இணைந்திருந்தது. ஆனால், போர் முடிவுக்கு வந்ததும், மணலாறு தமிழ்க் கிராமம் அனுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

அங்கு சிங்களக் குடியேற்றங்கள் பகிரங்கமாகவே இடம்பெற்றன. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தமிழர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டனர்.

ஆனால், கடந்த ஆண்டு மீண்டும் மணலாறுக் கிராமம் முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. இப்போது அதன் பெயர் மணலாறு அல்ல. வெலிஓயா என மாற்றப்பட்டுவிட்டது.

வெலிஓயா கிராமத்தில் முழுவதும் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இந்துக்கோயில்கள் அங்கே இப்போது இல்லை. பௌத்த விகாரை அங்கு புதிதாகக்கட்டப்பட்டுள்ளது.

தமிழ்ப்பாடசாலை இல்லை. தமிழ் மணம் வீசும் சகல அடையாளங்களும் அழிக்கப்பட்டு விட்டன. வெலிஓயா இப்போது முழுக்க ஒரு சிங்களக் கிராமம்.

அனுராதபுர மாவட்டத்துக்கு மாற்றப்பட்ட மணலாறுக் கிராமம் சிங்கள மக்கள் குடியேற்றத்தின் பின் 9 சிங்கள கிராம சேவகர் பிரிவுகளாக வெலிஓயா என்ற பெயருடன் மீண்டும் முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வடமாகாணசபைத் தேர்தலை முன்னிறுத்தி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அங்கு குடியேறியுள்ள மூவாயிரம் சிங்களக் குடும்பங்களுக்கே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிரந்தர காணி உறுதிகளை வழங்கினார்.

அந்தக் காணிகளில் பெரும்பாலானவை தமக்குச் சொந்தமானவை என அங்கு வாழ்ந்த தமிழர்கள் தெரிவிக்கின்றனர். காடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் மணலாறுக்கிராம மக்களில் சிலர் புலம்பெயர் தமிழ் ஊடகங்களில் கண்ணீர் மல்க இதனைத் தெரிவித்துள்ளார்கள்.

“நாட்டின் ஜனாதிபதியே தமிழருக்குச் சொந்தமான காணிகளைப் பறித்து எங்கிருந்தோ வந்த சிங்கள மக்களிடம் ஒப்படைத்திருப்பது மிகப் பெரிய கொடுமை” என அவர்கள் அதில் குறிப்பிடுகின்றனர். “மணலாறு கிராமத்தில் நிம்மதியுடனும், வசதியுடனும் நாம் வாழ்ந்தோம்; எங்கள் விவசாயக்காணிகள் அனைத்தும் சிங்களவருக்கே வழங்கப்பட்டுள்ளன...”

“நாம் அடந்த காட்டுப்பகுதிக்குள் எவ்வித அடிப்படை வசதியுமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்... எமது உரிமைகளுக்காக போராடி வருகின்றோம்” இவ்வாறு அந்த மக்கள் தங்கள் உள்ளக் குமுறல்களை வெளியிட்டுள்ளனர்.

வெலிஓயாக் கிராமத்தில் தமிழர் காணிகளில் குடியேறியுள்ள சிங்களவருக்குப் பாதுகாப்பாக மிகப்பலம் வாய்ந்த இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

“இலங்கையர்கள் யாராக இருந்தாலும் இலங்கையில் எப்பகுதியில் வேண்டுமானாலும் குடியேறலாம். அதனை யாரும் தடுத்து நிறுத்துவிட முடியாது. அவ்வாறான குடியேற்றங்களை இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்குதல் தவறானது”

இவ்வாறு ஜனாதிபதி முதல் அரசின் அமைச்சர்கள் வரை ஓயாமல் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த வசனங்களில் நியாயம் தென்படுவதுபோல் இருக்கலாம். ஆனால், யாதார்த்தம் அவ்வாறு இல்லை என்பது அவர்களுக்கே தெரியும்.

சுயமாக அவர்களாகவே வந்து குடியேறுவதுவேறு; ஆனால், பூர்வீக குடிகளான தமிழ் மக்களை விரட்டிவிட்டு அரசாங்கமே சகல வளங்களையும் வழங்கி அவர்களை அழைத்துவந்து குடியேற்றுவது என்பது கண்டிக்கத்தக்கது; அத்துமீறிய செயல்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இதனை தாம் வாழும் நாடுகளுக்கு தெளிவுபடுத்தி வருகின்றார்கள். சிங்களவர்கள் தாமாகவந்து குடியேற வில்லை.

கஷ்டமான வாழ்வுடன் போராடிக்கொண்டிருக்கும் சிங்கள மக்களுக்கு நல்வாழ்வு தருவதாக வாக்குறுதியளித்து அரசாங்கம் இந்தக்குடியேற்றங்களை மேற்கொண்டுள்ளது. உ-ம் அம்பாந்தோட்டையிலிருந்து 264 சிங்களக் குடும்பங்கள் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் கொண்டுவந்து குடியேற்றப்பட்டுள்ளனர்.

ஆனால், அவர்கள் அம்பாந்தோட்டையில் ஏழ்மை நிலையில் இருந்தவர்கள். பரம்பரை பரம்பரையாக மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வரும் தமிழ் மீனவர்களுக்குப் போட்டியாக அவர்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு இராணுவம் பூரண பாதுகாப்பு வழங்குகின்றது. அவர்கள் சட்டவிரோதமான மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். அது மாத்திரமல்ல, கொக்குத் தொடுவாய் தமிழ் மீனவர்களுக்கு எந்தெந்த வகையில் தொந்தரவு கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு தொந்தரவு கொடுக்கத் தூண்டப்படுகின்றார்கள்.

இவ்விடயம் குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற விவாதங்களின் போது தெரிவித்துள்ளனர். தமிழர் காணிகளைப் பறித்து சிங்களவர்களை அதில் குடியேற்றுவது என்பதை இலங்கை அரசு எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

இனவாதக் கண்ணோட்டத்துடன் அதனைப் பாரக்கக்கூடாது என அரசு தெரிவித்தாலும், தமிழினப் பரம்பலைத் துண்டாடும் யதார்த்தம் ஒன்று காணப்படுகின்றது. வடக்கு -கிழக்கு மாகாணங்களில் அவசரம் அவசரமாகக் குடியேற்றப்படும் சிங்கள மக்களை அவர்கள் வாழும் பகுதியிலேயே அரசினால் காணி வழங்கி குடியேற்றமுடியாதா?

வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து ஏனைய ஏழு மாகாணங்களில் மிகப்பெரிய பரந்த அளவிலான நிலப்பகுதி வெறுமனே கிடக்கின்றது. அங்கே இலங்கை அரசு இவ்வளவு தீவிரமாக குடியேற்றங்களை ஏன் ஏற்படுத்தவில்லை? ஏன் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளைக் குறிவைத்து செயற்படுகின்றீர்கள்? என்ற இந்தக் கேள்விகளை புலம்பெயர் தமிழ் ஊடகங்கள் பல முன்வைத்துள்ளன. ஒரு சில பொதுஅமைப்புகள் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள புள்ளிவிபரம் உலகத் தமிழர்களைப் பெரும் கவலையுறச் செய்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் அரசினால் 25 ஆயிரம் ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு சில காணிகள் அரச நிலங்கள். ஆனால், பெரும்பாலானவை தமிழருக்குச் சொந்தமானவை.

கடலும் கடல்சார்ந்த இடம், விவசாயத்துக்கெனப் பயன்படுத்தப் பட்ட நிலம், சகல வசதிகளையும் கொண்ட நகர்ப்புறங்கள் ஆகியவை சுவீகரிக்கப்பட்ட காணிகளில் அடங்கும்.

இந்தக் காணிகளுக்குச் சொந்தக்காரர்களான 16 'ஆயிரம் தமிழ் மக்கள் தற்போது மிகப் பெரிய அவலத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் அனைவரையும் அரசு கேம்பன் காட்டுப்பகுதியில் குடியமர்த்தியுள்ளது. பொது அமைப்புக்கள் அம்மக்களின் வாழ்வியல் தொடர்பாக வழங்கிய புகைப்படங்களும் புலம்பெயர் தமிழ் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

தமிழர்கள் நாளாந்த உணவுக்காகப் போராடும் போது உரிமைகளைக் கேட்டு குரல் எழுப்பமாட்டார்கள் என்பதும் அரசின் ஒரு தத்துவமா?

வலிகாமம் வடக்கு கிழக்கு தமிழர்களின் காணிகளில் 6381 ஏக்கர் நிலப்பரப்பு 24 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பகுதி- பாடசாலை, கோவில்கள், அன்னதான மண்டபங்கள், அழகான வீடுகள், வீட்டுத்தோட்டங்கள் வளம் கொழிக்கும் பெரும் விவசாய நிலங்கள் , தொழிற்சாலைகள் என தமிழரின் பூர்வீக நிலம்,சொத்துகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவ ஆக்கிரமிப்பல் உ ள்ளது.

எல்லோரிடமும் காணி உறுதிகள் உண்டு. இந்தக் காணிகள் விரைவில் தம்மிடமே ஒப்படைக்கப்படும் என மக்கள் நம்பி இருந்தனர். போர் முடிந்த நிலையிலும் அவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது.

இதுவிடயமாகநீதிகோரி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீதான விசாரணை மே 13-ம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இக்காணிகளைச் சுவீகரிப்பதாக இராணுவம் அறிவித்தல் விடுத்துள்ளது.

அங்கு வாழ்ந்த மக்கள் தங்கள் காணிகளைத் தங்களிடமே ஒப்படைக்கக் கோரி தற்போது தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். மீளுமா தாய் நிலம்?

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாதத்தில் மட்டும் 4 தற்கொலை மரணங்கள்

யாழ்ப்பாணத்தில் இம்மாதத்தில் மட்டும் 4 தற்கொலை மரணங்கள் இடம் பெற்றுள்ளதோடு 3 தற்கொலை முயற்சிகளும் இடம் பெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரி வித்துள்ளன . இவை காதல் தொடர்பு மற்றும் கடன் சுமையால் ஏற்பட்டவை என்றும் சிலவற்றுக்கு காரணம் அறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கத் தவறுவதாலேயே இவ் இளவயது தற்கொலை மரணங்கள் ஏற்படுவதாக வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் .

தமது பிள்ளைகளைக் கண்காணித்து அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பெற்றோர்கள் கவனித்து அறிந்து உளவளப்படுத்துவதன் மூலம் இவ் இளவயது தற்கொலை மரணங்களைக்கட்டுப்படுத்த முடியும் என அவ் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

போருக்கு பின்னரான காலப் பகுதியில் அதிகளவிலான தற்கொலை மரணங்கள் இங்கு பதிவாகியுள்ளன என அவர் மேலும் கூறினார் . (அ-4)

# அமைச்சர்களுக்கிடையில் சண்டை வேண்டாம்- மஹிந்த

(கொழும்பு)

அமைச்சர்களுக்கு இடையில் சண்டை போட்டுக் கொள்ள வேண்டாம் என அமைச்சரவையின் கூட்டத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனையை வழங்கியுள்ளார்.

அமைச்சர்களுக்கு இடையிலான முரண்பாடுகளை உடனடியாக களைய வேண்டும். அமைச்சர்களுக்கு இடையில் அடிக்கடி முரண்பாடு ஏற்படுவது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு பாதகத்தை ஏற்படுத்தும்.

அமைச்சர்களுக்கு இடையிலான முரண்பாடுகளை எதிர்க்கட்சிகள் பிரசார நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ளக் கூடும். அரசாங்கத்தின் நன்மதிப்பிற்கு பாதகத்தன்மை ஏற்படக் கூடிய அபாயம் நிலவுகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# உருளைக்கிழங்கு கொள்கலனில் கருக்கலைப்பு மருந்து கண்டுபிடிப்பு

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு கொள்கலனில் இருந்து கருக்கலைப்புக்கு பயன்படுத்தப்படும் 300 இலட்சம் ரூபா பெறுமதியான 30 ஆயிரம் மருந்து குப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உருளைக்கிழங்கு இறக்குமதி செய்த கொள்கலனை நேற்று சோதித்த போதே குறித்த மருந்துக் குப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சந்தேகநபர் ஒருவர் சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் எனவும் பாகிஸ்தானில் இருந்து இந்த மருந்துக் குப்பிகளைக் கொண்டுவந்துள்ளதாகவும் சுங்கப் பணிப்பாளர் மாலிபியனே தெரிவித்துள்ளார். மூன்று கொள்கலன்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவற்றின் ஒன்றில் 15 பொதிகளில் கருக்கலைப்பு மருந்துக் குப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. (அ-2)

# யாழ்.இந்து சமயப் பேரவை நடத்தும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்இந்துசமயப்பேரவையினால் சைவாலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும் தொடர்பான கருத்தரங்கு மே.4 ஆம் திகதி சனிக்கிழமை மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் பிற்பகல் 2மணிக்கு பலாலி வீதி, கந்தர்மடம் இந்து சமயப் பேரவையின் நடராஜர் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் கருத்தரங்கு இந்து சமயப் பேரவையின் பெருந்தலைவர் சிவஸ்ரீ. கணேச பரமேஸ்வர தீட்ஷிதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரைகளினை இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவாகம ஞான பாஸ் கரனும் இந்துசமயப் பேரவை ஸ்ரீநட ராஜர் கோயில் பிரதம சிவாச்சாரியர் சிவஸ்ரீ. ச.சோமஸ்கந்தக் குருக்களும் ஆற்றவுள்ளனர்.

கருத்துரைகளை சைவாலயக் கிரியைகள் என்ற தலைப்பில் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும் சைவ பரிபாலனம் என்ற தொனிப் பொருளில் பிரம்மஸ்ரீ.ந. சதாசிவ ஐயரும் சைவாலய நிர்மாணம் என்ற விடயத்தில் இந்து நாகரிகத்துறை பேராசிரியர்மா.வேதநாதனும் வழங்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் அமர்வுகள் பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி ச.சத்தியசீலன் தலைமையில் இடம் பெறவுள்ளன.

ஆசியுரைகளை தில்லை வாழ் அந்தணர் சிவஸ்ரீ கணேச பரமேஸ்ர தீட்ஷிகரும் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா ஸ்ரீ.கு.நகுலேஸ்வரக் குருக்களும் மாவை ஆதீனகர்த்தா ஸ்ரீ.சு.து.ஷ. இரத்தின சபாபதிக் குருக்களும் ஆற்றவுள்ளனர்.

கருத்துரைகளை சமூக நோக்கில் சைவாலயப் பணிகள் என்ற தலைப்பில் பேராசிரியர் கா. குகபாலன், சைவாலயங்களும் பக்தி இலக்கியங்களும் எனும் தலைப்பில் பேராசிரியர் நா.ஞானகுமரன், ஆலயப் பிணக்குகளை தவிர்ப்பது எப்படி? எனும் தலைப்பில் பேராசிரியர் த. தேவராஜா,வெளிநாடுகளில் சைவாலயங்களில் ஏற்படும் பிணக்குகள் எனும் பொருளில் சி.சக்திதரன் சைவாலயங்களில் பெண்கள் காட்டும் பக்தி நெறி எனும் விடயத்தில் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ)




★ 1672-பிரான்சின் பதினான்காம் லூயி மன்னன் நெதர்லாந்தை முற்றுகையிட்டான்.

★ 1770-ஜேம்ஸ் குக் அவுஸ்திரேலியாவின் இன்றைய சிட்னியை அடைந்து தான் சென்ற இடத்துக்கு பொட்டனி விரிகுடா எனப் பெயரிட்டான்.

★ 1862-அமெரிக்க உள்நாட்டுப் போர்: நியூ ஓர்லென்ஸ் நகரம் கூட்டணிப் படையிடம் வீழ்ந்தது.

★ 1882-பெர்லின் நகரில் எலெக்ட்ரோமோட் எனப்படும் பேருந்து வெள்ளோட்டம் இடம்பெற்றது.

★ 1903-கனடாவின் அல்பேர்ட்டாவில் 30 மில்லியன் கண மீற்றர் நிலச்சரிவு ஏற்பட்டதில் 70 பேர் உயிரிழந்தனர்.

★ 1916-முதலாம் உலகப் போர்: பிரித்தானிய இந்தியப் படைகள் ஒட்டோமான் படைகளிடம் ஈராக்கின் கூட் என்ற இடத்தில் சரணடைந்தனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: இத்தாலியில் ஜேர்மனிய இராணுவ நேச அணிகளிடம் நிபந்தனையின்றி சரணடைந்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தின் பல பகுதிகளிலும் உணவுப் பொதிகளை விமானத்தில் இருந்து வீசும் மானா நடவடிக்கையை ஐக்கிய இராச்சிய வான்படையினர் ஆரம்பித்தனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஹிட்லர் ஏவா பிரெளன் என்ற தனது நீண்ட நாளைய காதலியை தனது பெர்லின் சுரங்க அறையில் வைத்து மணம் புரிந்தார். இருவரும் அடுத்த நாள் ஏப்ரல் 30 ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் டாக்கவ் என்ற இடத்தில் இருந்த வதைமுகாமை அமெரிக்கப் படைகள் விடுவித்தனர்.

★ 1946-ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஹிடெக்கி டோஜோ மற்றும் 28 முன்னாள் தலைவர்கள் போர்க் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டனர்.

★ 1970-வியட்நாம் போர்: அமெரிக்க மற்றும் தென் வியட்நாம் படைகள் வியட்கொங் போராளிகளைத் தேடி கம்போடியாவை முற்றுகையிட்டன.

★ 1975-வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க குடிமக்கள் சாய்கோன் நகரை விட்டு புறப்பட்டனர்.

★ 1986-லொஸ் ஏஞ்சலீஸ் நகர பொது நூலகம் தீப்பிடித்ததில் 4 இலட்சம் நூல்கள் அழிந்தன.

★ 1991-வங்காள தேசத்தில் சிட்டாகொங்கில் இடம்பெற்ற சூறாவளியில் ஒரு இலட்சத்து 38 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர். 10 மில்லியன் பேர் வீடுகளை இழந்தனர்.

★ 2005-. 29 ஆம் ஆண்டு கால முற்றுகையின் பின்னர் லெபனானில் இருந்து சிரியா முற்றாக வெளியேறியது.

**பிறப்புக்கள்**

★ 1818-இரண்டாம் அலெக்சாண்டர், ரஷ்யாவின் பேரரசன் (இ.1881)

★ 1848-ரவி வர்மா, இந்திய ஓவியர் (இ.1906)

★ 1891-பாரதிதாசன், புரட்சிக்கவிஞர், பாவேந்தர் (இ.1964)

★ 1938-திமிலை மகாலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (இ.2010)

★ 1957- மேமன்கவி, ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கியப் படைப்பாளி

★ 1970-அன்ட்ரே அகாசி, முன்னணி டெனிஸ் ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

★ 1843-வின்செட் ரொசாரியோ, இலங்கையின் முதல் ஆயர்

★ 1980-ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக், ஆங்கிலத் திரைப்பட இயக்குநர் (பி.1899)

## ரவி வர்மா



ரவி வர்மா நவீன காலத்துக்கு ஏற்ற முறையில் மேல் நாட்டில் வழங்கும் ஓவிய மரபை அப்படியே இந்தியப் பாணி ஓவியக்கலைக்குள் புகுத்தியவர். உலகப் புகழ் பெற்ற பல ஓவியங்களைப் படைத்தவர்.

இவர் கேரளாவின் திருவிதாங்கவர் சமஸ்தானத்திலுள்ள கிளிமானூர் என்னும் ஊரில் 1848 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி பிறந்தார். சிறு வயதிலிருந்தே சமஸ்கிருதம், மலையாளம் ஆகியவற்றுடன் ஓவியத்தையும் தம்முடைய உறவினர் ராஜாவர்மாவிடமிருந்து கற்றுக் கொண்டார்.

ஐரோப்பியர்களின் எண்ணெய் வண்ண ஓவியங்களைப் பற்றி சில உத்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். தமது வாழ்வின் பெரும் பகுதியை அவர் மும்பையில் கழித்தார். அங்குதான் 1894 இல் தமது அச்சகத்தைத் நிறுவினார். 1896 இல் அவரது அச்சகத்தில் முதல் பிரதியாக தமயந்தி அன்னப்பட்சியுடன் உரையாடும் ஓவியம் அச்சிடப்பட்டது.


1873 இல் வியென்னாவில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் ரவிவர்மாவின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு சிறப்பான விருதைப் பெற்றன.

இவர் தென்னிந்தியப் பெண்களை இந்துக் கடவுளரின் உருவகங்களாகப் படைத்தார். பழம்பெரும் காவிய நாயகிகளான துஷ்யந்தை, சகுந்தலை, தமயந்தி போன்றோரின் உருவங்களை வரைந்து உலகப் புகழ் பெற்றார்.

2002 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதி டில்லியில் நடந்த ஓவிய ஏலத்தில் அவரது யசோதையும் கிருஷ்ணனும் ஓவியம் 56 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனமை குறிப்பிடத்தக்கது. 1899 இல் அச்சகத்தை ஸ்லிஷர் நகரத்துக்கு மாற்றினார். 1906 ஆம் ஆண்டு 58 ஆவது வயதில் அவர் இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாடு விவகாரத்தில் கனடாவின் வழியை பின்பற்ற வேண்டும்



## ஆஸியைக் கோருகிறது கிறீன்ஸ் கட்சி



(கொழும்பு)

**இலங்கை மனித உரிமைகள் மற்றும் வெளிவிவகாரம் தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாடு தமக்கு அதிருப்தி அளிப்பதாக தெரிவித்துள்ள கிறீன்ஸ் கட்சித் தலைவி கிறிஸ்டன் மின்னே, அவுஸ்திரேலிய, கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பரின் வழியையே பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.**

உள்நாட்டு அரசியல் நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மனித உரிமை நிலைமைகளை உதாசீனம் செய்யும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை அவுஸ்திரேலிய அரசாங்கம் புறக்கணிக்க வேண்டுமென அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

உள்நாட்டு அரசியலுக்காக மனித உரிமை மீறல் விடயங்களை கவனத்திற் கொள்ளாமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் இதன் போது அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டு வருவதாகவும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் மனித உரிமைகள் மீறல்கள் குறித்த விடயத்தில் அவுஸ்திரேலிய அரசாங்கம் கண்மூடித்தனமாக செயற்படுகின்றது என்றே அர்த்தப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கைக்கு தான் விஜயம் செய்திருந்த போது அங்கு மக்கள் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் குறித்து நேரடியாக அறிந்து கொண்டதாக குற்றம் சுமத்தியுள்ளதோடு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தற்போதைய அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

## 3 ஆம் ஆண்டு நினைவும் வழிகாட்டல் கருத்தரங்கும்

சிகரம் நிறுவனத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கல்வி தொழில் விசா சேவைகள் கண்காட்சியும் கருத்தரங்கும் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் இல. 153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள சிகரம் நிறுவன விசேட கண்காட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணிவரை சிகரம் வரலாறு மற்றும் சேவைகள் தொடர்பான கண்காட்சியும் முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை விருந்தினர் உரையும் இடம்பெறவுள்ளன. மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணிவரை கண்காட்சியும் முற்பகல் 10 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை யாழ். -கொழும்பு அரச, தனியார் கல்வி, உயர்கல்வி, தொழிற் கல்வி நிறுவன பிரதிநிதிகள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள், பன்னாட்டு விசா சேவை ஆலோசகர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் பங்குபற்றும் கருத்தரங்கும் வழிகாட்டி ஆலோசனைகளும் இடம்பெறவுள்ளன. (அ-5)

## மேதினம் முடிவுற்றதும் வடக்கு தேர்தலுக்கான ஏற்பாடுகள்

### அமைச்சர் டளஸ் தெரிவிப்பு

மேதினம் முடிவுற்றதும் வடமாகாணத்தில் தேர்தலை எதிர் கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது தற்போது கட்சியின் மேதினக் கொண்டாட்டங்களை சிறப்பாக நடத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர் ஓரிரு வாரங்களில் வேட்பு மனுக்கான விண்ணப்பங்களைக் கோரவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனுவில் வடக்கிலுள்ளோர் இணைத்துக் கொள்ளப்படுவர். அதற்கென அவர்கள் விண்ணப்பிப்பதற்கு வாக்களிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் அமைச்சர் டபிள்யூ ஜோன் செனவிரத்ன வடமாகாண தேர்தல் தொடர்பில் தெரிவிக்கையில்.

வேட்பு மனுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை மூலம் பொருத்தமானோர் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

விண்ணப்பம் கோரலுக்கான விளம்பரங்கள் தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## ஒப்பந்த அடிப்படையிலான ஊழியருக்கு சகல சலுகைகளும் வழங்க சட்டம்

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் சகல சலுகைகளும் வழங்கப்படும் விதத்தில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது என தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முதல் பங்கு தாரர்களாக உள்ள தொழிலாளர்வர்க்கத்துக்கு நிவாரணங்கள் வசதிகள் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

44 சம்பள நிர்ணய சபைகளை நடைமுறைப்படுத்தி 25வீதத்துக்கும் 40 வீதத்துக்கும் இடையிலான ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனூடாக 4 மில்லியன் ஊழியர்கள் நன்மையடைய விரும்புவதாகவும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் சகல சலுகைகளும் வழங்கப்படும் விதத்தில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் முதல் பங்குதாரர்களாக உள்ள தொழிலாளர் வர்க்கத்துக்கு நிவாரணங்கள் வசதிகள் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் இதன் போது தொழில் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். (அ-5)

## விடுதலைப்புலிகளுக்கு மூன்று நாடுகள் ஆதரவளித்தன

### கே. பி. தெரிவிப்பு

இறுதி யுத்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மூன்று நாடுகள் பாதுகாப்பு வழங்க முன்வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் வெளியுறவு பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இதனை தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆபிரிக்க நாடுகளும் ஒரு ஆசிய நாடும் இவ்வாறு விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு வழங்க முன்வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தாம் 2008 ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் யுத்த நிறுத்தம் குறித்து வலியுறுத்தி வந்த போதும் அவர் இதனை கருத்தில் கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டதன் பின்னர் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வது தொடர்பில் வேலுப்பிள்ளைபிரபாகரன் ஆலோசித்தபோதும் அது காலம் கடந்திருந்ததாக அவர் கூறியுள்ளார். (அ-2)

## வாகனப் புகை பரிசோதனை மே மாதத்தில் ஆரம்பிக்கப்படும்

வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையை பரிசோதனை செய்யும் நடவடிக்கை அடுத்த மாதத்திலிருந்து நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ். எம். ஹரிஸ் சந்திர தெரிவித்துள்ளார்.

வாகன அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ளும் போது வாகனத்திலிருந்து வெளியேறும் புகையும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவது கட்டாயம் என வலியுறுத்தியுள்ளார்.

தற்போது வாகனங்களில் இருந்து அதிகளவான புகை வெளியேறுவதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. இதன்படி வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையை பரிசோதனை செய்யும் நடவடிக்கை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்நிலையில் புகை பரிசோதனைச் சுற்று நிருபம் மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இப் பரிசோதனையின் போது சுற்றுப் புறசூழல்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் புகை வெளியேறும் வாகனங்களின் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம்குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## முன்னாள் புலிகள் பாராளுமன்றில்

புனர்வாழ்வை நிறைவு செய்த 375 முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க போராளிகள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தைப் பார்வையிட்டனர். இந்த குழுவினர் எதிர்வரும் காலங்களில் காலி மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலிகள் 12 ஆயிரம் பேரில் குறித்த 375 பேர் மாத்திரமே புனர்வாழ்வளிப்புக்காக எஞ்சியுள்ளனரென்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மாந்தை மேற்கில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

பவ்ரல் ஆட்பதிவுத் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து மன்னாரில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவையொன்று எதிர்வரும் மே மாதம் 6, 7, 8 ,9 ஆகிய திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 6 ஆம் திகதி கிராம அலுவலர் பிரிவு ஒன்று முதல் மூன்று வரையும் வெள்ளாங்குளம் அரசதமிழ கலவன் பாடசாலையிலும் மறுநாள் கிராம அலுவலர் பிரிவு 4 தொடக்கம் 9 வரை இலுப்பைக்கடவை பாடசாலையிலும் வைத்து அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி கிராம அலுவலர் பிரிவு 18 தொடக்கம் 36 வரையில் அடம்பன் பிரதேச பிரதேச செயலகத்திலும் மறுநாள் கிராம அலுவலர் பிரிவு 10 தொடக்கம் 17 வரையும் பாலியாறு சன்னார் முன்பள்ளியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. அத் துடன் அன்றைய தினம் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப் பிப்பவர்களுக்கு இலவசமாகப் புகைப்படங்களும் முத்திரைகளும் வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு 0778415543 0776538430 ஆகிய தொலை பேசி இலக்கங்களை அழைத்து தகவல்களைப் பெற முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ்வப் பிரிவு கிராம அலுவலரினைச் சந்திப்பதன் மூலமும் தகவல்களைப் பெற முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார கட்டண அதிகரிப்பை இரத்துச் செய்யக் கோரிக்கை



மே மாதம் 20 ஆம் திகதி ஆகும்போது அதிகரிக்கப்பட்ட மின்சார கட்டணத்தை இரத்து செய்யவில்லை என்றால் ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவிருப்பதாக ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளன இணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம், சுதந்திர வர்த்தக சேவையாளர் சங்கம் மற்றும் ஆசிரியர்கள் சங்கம் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்கள் இதில் அங்கம் வகிக்கின்றன.

இதேவேளை, மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராக புத்தளம் நகரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது வடமேல் மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் தங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தாம் பொலிஸில் முறைப்பாடு செய்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வடக்கு, கிழக்கை உன்னிப்பாக அவதானிக்கிறது அமெரிக்கா

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

வடக்கு மாகாண சபைக்கு முதல் முறையாகத் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை அமெரிக்கா உன்னிப்பாக கண்காணித்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலைக்குச் சென்ற அமெரிக்கத் தூதுவர் முஸ்லிம்கள் மத்தியில் உரையாற்றியபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் அமெரிக்கத் தூதுவர் காணி விவகாரங்கள், முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலங்கள் இடங்கள் அழிக்கப்படும் விவகாரம், முஸ்லிம்களின் எதிர்ப்பையும் மீறி அவர்களின் வழிபாட்டு இடத்தில் படைகளின் தளம் அமைக்கப்படும் விவகாரம், சிறார்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், சிங்களவர்களால்



முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் அவர் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் கிழக்கில் அடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்தும் அமெரிக்க தூதுவர் விசாரித்ததாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது. (அ-2)

# முஸ்லிம்களின் உரிமைகளை கட்சித் தலைவர்கள் அடகு வைத்துவிட்டனர்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

அரசாங்கத்தில் அநேகமான முஸ்லிம் தலைவர்கள் காணப்படுகின்றபோதும் முஸ்லிம் மக்களின் உரிமைகள் தொடர்பில் கதைப்பதற்கு அவர்கள் முன்வருவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க மன்னாரில் நேற்று இடம்பெற்ற கட்சி செயற்பாட்டாளர்களின் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,


முஸ்லிம் மக்களின் உரிமைகளை முஸ்லிம் தலைவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அடகு வைத்துவிட்டனர்.

நாட்டில் இரண்டு சிறுபான்மை இனங்கள் உள்ளன. ஒன்று தமிழர். மற்றையது முஸ்லிம்கள். தமிழர்களுக்கு எழும் பிரச்சினைகள் தொடர்பில் இரா.சம்பந்தன் பேசுகிறார். முஸ்லிம்கள் குறித்து தாமே பேச வேண்டி இருக்கிறது.

இதற்கு ஒரு முஸ்லிம் தலைவரும் ஒத்துழைப்பதில்லை. சில தருணங்களில் இரா. சம்பந்தன் எனக்கு ஆதரவாக முஸ்லிம்களுக்கு குரல் கொடுக்கிறார்.

இவ்வாறான முஸ்லிம் மக்களின் உரிமைகளை அடகு வைத்த முஸ்லிம் தலைவர்கள் எந்தப் பக்கத்தைப் பார்த்து வணக்கம் செலுத்துகின்றனர் என்றும் தமக்குப் புரியவில்லை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மடு தேவாலயத்



திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளதுடன் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (அ-2)

# நுவரெலியாவில் போராட்டம்

நுவரெலியா மாவட்டத்துக்கான பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பை வலியுறுத்தி புதிய மலையகம் என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை முன்னிட்டு இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே கடந்த ஞாயிற்றுக்கிழமை கொட்டகலையில் வைத்து பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு வேதன உயர்வை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்டபோது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. இந்த நிலையிலேயே உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை முன்னிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உணவுத் தவிர்ப்பு போராட்டத்துக்கு மாநகர சபை உறுப்பினர் ஆர்.ராஜாராம் ஒழுங்கு செய்துள்ளார். இதற்கு பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பும் தமது ஆதரவை வழங்கியுள்ளது. (அ-2)

# தமிழக மீனவர் மீது மத்திய அரசு கருணை காட்டாதது ஏனோ?

## குமுறுகிறார் கருணாநிதி

கேரள மீனவர்கள் மீது காட்டிய அதிக அக்கறையை தமிழக மீனவர்கள் மீது காட்டாதது ஏன் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து பல ஆண்டு காலமாக நடத்தி வரும் தாக்குதல் குறித்து தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சியினரும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி இந்தப் பிரச்சினை குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

ஏன் தமிழக அரசும் கூட தமிழக மீனவர்கள் தாக்கப்படுகின்ற போதெல்லாம் உடனடியாக பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. நமது வலியுறுத்துதலைத் தொடர்ந்து இந்திய அரசும் இலங்கை அரசுக்கு முறையீடு செய்துவிட்டு அதுபற்றி நாடாளுமன்றத்திலோ அல்லது அறிக்கை மூலமாகவோ தங்கள் கடமை முடிந்துவிட்டதைப் போல விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால் எல்லாப் பிரச்சினைகளும் முடிந்து விட்டனவா என்றால் இல்லை என்றே வேதனையோடு சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழக மீனவர்களின் அவலம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு முறையும் மத்திய அரசிடம் இந்தப் பிரச்சினைக்காக வேண்டுகோள் விடுப்பதும் தொடர் கதையாக உள்ளது.

பல ஆண்டு காலமாக நீடித்து வரும் மீனவர்களின் இந்தத் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க இனியும் காலதாமதம் செய்யாமல் விரைந்து தீவிரமான ஒரு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இத்தாலி கடற்படையினரால் கேரள மீனவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வில் மத்திய அரசு செலுத்தி வருகின்ற அக்கறையில் நூற்றில் ஒரு பங்காவது தமிழக மீனவர்கள் மீதும் செலுத்திட வேண்டுமென்று தமிழகமே எதிர்பார்க்கிறது.

மேலும் கடந்த 1985 ஆம் ஆண்டு இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது சிங்களக் கப்டன் ஒருவர் அடிக்கடி தமிழக மீனவர்களை தமிழக எல்லைப் பகுதிக்குள்ளேயே வந்து தாக்கி வருவதைக் கேள்விப்பட்டு கோபமடைந்த பிரதமர் இந்திராகாந்தி அந்தக் கப்டனைக் கைது செய்ய நமது கடற்படைக்கு உத்தரவிட்டார்.

நமது கடற்படை வீரர்களும் சிங்களக் கப்டனைப் பிடித்து வந்து மண்டபத்தில் சிறை வைத்தனர். அதன்பின்பு அந்தக் கப்டனையும் சக இலங்கை வீரர்களையும் மன்னிப்புக் கேட்க வைத்து இலங்கை அரசு திரும்பப் பெற்றது.

இச் சம்பவத்தை இந்திய அரசு நினைவிலே கொண்டு இந்திராகாந்தி எடுத்த நடவடிக்கையைப் போல தீவிரமான நடவடிக்கையைத் தற்போது மேற்கொள்ள வேண்டும்



என்பதுதான் நமது மீனவர்களின் விருப்பமாகும்.

மத்திய அரசு மேலும் இதிலே தயக்கம் காட்டுமேயானால் தமிழகத்தின் மீதும் தமிழக மீனவர்கள் மீதும் இந்திய அரசுக்கு அக்கறை இல்லை என்பதையே அது தெளிவாக்குவதாக அமைந்துவிடும் என்பதை மத்திய அரசு மறந்து விடக்கூடாது என அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் குற்றச்சாட்டுக்கள்; நெருக்கடிக்குள் மத்திய அரசு



மிகப் பெரிய அளவிலான அலைக் கற்றை ஊழல், அதைத் தொடர்ந்து வெளியான நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு முறைகேடு ஆகியவைகளால் மத்திய அரசு பல்வேறு வகையில் நெருக்கடிக்கு ஆளாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அலைக்கற்றை முறைகேடு பற்றி சி.பி.ஐயும் காங்கிரஸ் எம்.பி. பி. சி. சாக்கோ தலைமையிலான பாராளுமன்ற கூட்டுக்குழுவும் தனித் தனியாக விசாரித்து வருகிறது.

கூட்டுக்குழு முன் முன்னாள் மத்திய மந்திரி ஆ.ராசாவுக்கு சாட்சியம் அளிக்க அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து தி.மு.க காங்கிரஸ் கட்சிகளிடையே விரிசல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே பாராளுமன்ற கூட்டுக்குழு அறிக்கையின் ஒரு பகுதி பத்திரிகைகளில் வெளியானது. அதில் அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேட்டில் பிரதமருக்கும் நிதி அமைச்சருக்கும் தொடர்பு இல்லை என கூறப்பட்டு இருந்தது.

இந்நிலையில் முழு அறிக்கை வெளியாகும் முன் காங்கிரஸ் தனக்கு சாதகமான பகுதியை மட்டும் முன்கூட்டியே பத்திரிகைகளுக்கு கசிய விட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

இதனையடுத்து இதற்கு காரணமான பி.சி.சாக்கோவை கூட்டுக் குழுத் தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நெருக்கடிகள் காரணமாக கடந்த வாரம் நடைபெற இருந்த பாராளுமன்ற கூட்டுக்குழு கூட்டம் திடீரென்று இரத்துச் செய்யப்பட்டது.

இந்த நிலையில் நிலக்கரி சுரங்க முறைகேடு தொடர்பான சி.பி.ஐ விசாரணை அறிக்கையில் மத்திய சட்ட மந்திரி திருத்தங்கள் செய்ததாக தகவல் வெளியானது.

இந்தப் பிரச்சினையை எதிர்க்கட்சிகள் கிளப்பி வருவதால் பாராளுமன்றம் நடை பெறமுடியாமல் முடங்கிக் கிடக்கிறது.

இதற்கிடையே உச்ச நீதிமன்றில் நிலக்கரி சுரங்க விசாரணை தொடர்பான பிரமாண பத்திரம் ஒன்றை சி.பி.ஐ தாக்கல் செய்தது. அதில் சுரங்க முறைகேடு விசாரணை அறிக்கை சட்ட அமைச்சிற்கும் பிரதமர் அலுவலக அதிகாரிகளுக்கும் காண்பிக்கப்பட்டது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டுள்ளது. இது மத்திய அரசுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினையில் பிரதமர் மன்மோகன்சிங்கும் சட்ட அமைச்சர் அஸ்வினி குமாரும் பதவி விலகல் செய்ய வேண்டும் என்று பாரதீய ஜனதா தற்போது போர்க் கொடி உயர்த்தியுள்ளது.

எனினும் பதவி விலகல் செய்யும் பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் மன்மோகன்சிங் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார்.

இந்நிலையில் இன்று பாராளுமன்றம் மீண்டும் கூடுகிறது. இதன் போது இந்த விவகாரத்தை மீண்டும் விவாதிக்க பாரதீய ஜனதா திட்டமிட்டுள்ளதுடன் பிரதமர், சட்ட அமைச்சர் ஆகியோர் பதவி விலகல் செய்யும்வரை பராளுமன்றத்தை நடத்தவிட மாட்டோம் என்றும் பாரதீய ஜனதா எச்சரித்துள்ளது.

இதன் காரணமாக பாராளுமன்றம் செயற்பட முடியாத நிலை தொடர்ந்தால் நிதி மசோதாவை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்படும். நிதி மசோதா இந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படவில்லை எனின் மத்திய அரசு கவிழ்க்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு முன் கூட்டியே தேர்தல் வரும் நிலைக்கு தள்ளப்பட்டுவிடும்.

இந்த விவகாரத்தால் காங்கிரஸ் தலைவர் சோனியா கவலையடைந்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் சோனியாவுக்கும் பிரதமர் மன்மோகன்சிங்குக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்நிலையிலேயே மத்திய அரசு இவ்விவகாரங்களினால் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. (அ-5)




## சரப்ஜித் சிங்கை பார்வையிட அவரின் குடும்பத்தினர் விஜயம்

மருத்துவமனையில் கோமாவில் இருக்கும் சரப்ஜித் சிங்கை பார்க்க அவரது குடும்பத்தினர் நேற்று பாகிஸ்தான் சென்றுள்ளனர்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சரப்ஜித்சிங் சக கைதிகளால் தாக்கப்பட்டார். இதில் படுகாயம் அடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவர் கோமாவில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் அவருக்கு செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டுள்ளதுடன் மூளையில் 60 சதவீதம் சேதம் அடைந்துள்ளதாகவும் அவரது முதுகெலும்பு உடைந்துவிட்டதாகவும் அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்திற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது. இந்நிலையில் சரப்ஜித் சிங்கின் மனைவி சுக்ப்ரீத் கௌர், மகள்மார் பூனம் ஸ்வபன்தீப் கௌர் மற்றும் அவரது சகோதரி தல்பீர் கௌர் ஆகியோருக்கு பாகிஸ்தான் அவசர விசா வழங்கியுள்ளது.

இதையடுத்து அவர்கள் நேற்று லாகூர் சென்று கோமாவில் இருக்கும் சரப்ஜித்தை பார்ப்பதற்கு சென்றுள்ளனர்.

கோமாவில் இருக்கும் சரப்ஜித் சிங்கை இந்தியா கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சிறையில் கைதிகள் தாக்கப்பட்டு கோமாவில் இரு



க்கும் அவரை பரிசோதித்து மருத்துவ ஆலோசனை வழங்க இந்தியாவில் இருந்து மருத்துவர்களை அனுப்பி வைக்க மத்திய அரசு முன் வந்துள்ளது.

மேலும் சரப்ஜித்தை இந்தியாவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ள நிலையில் இந்திய-பாகிஸ்தான் கூட்டு நீதித்துறை குழுவில் உள்ள ஓய்வு பெற்ற இந்திய நீதிபதிகள் கே.எஸ்.கில்.எம். ஏ.கான் ஆகியோர் விரைவில் லாகூர் சிறைக்கு சென்று நடந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தவிருக்கின்றனர்.

அத்துடன் இந்திய கைதிகளின் நிலை குறித்து கேட்டறியவுள்ளனர். முன்னதாக அவர்கள் நேற்று முன்தினம் கராச்சி சிறைக்கு சென்று அங்கு இருக்கும் இந்திய கைதிகளை சந்தித்து பேசினார்.

அவர்கள் கைதிகளின் ஆவணங்கள் மற்றும் அவர்களின் விடுதலைக்காலம் போன்றவற்றை ஆய்வு செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஊழலைப் பற்றி ராகுல்காந்தி பேசுவது சாத்தான் கீதை ஓதுவது போன்றது

### சுஷ்மா சுவராஜ் சாட்டை



(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி கர்நாடகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்ற பா.ஜ.க. ஆட்சி ஊழலில் உலக சாதனை படைத்துவிட்டது என்று குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து ஊழலைப் பற்றி ராகுல்காந்தி பேசுவது **சாத்தான் கீதை ஓதுவது** போன்றதாகும் என சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் ஹவேரி மாவட்டத்தில் உள்ள ஷிக்கானில் பா.ஜ.க வேட்பாளரை ஆதரித்து நேற்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட போதே பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பா.ஜ.கவைப் பற்றி விமர்சிப்பதற்கு முன்னதாக ராகுல்காந்தி ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் மீது படிந்துள்ள கறைகளைச் சுத்தப்படுத்த வேண்டும்.

ஏழை மக்களோடு இருப்போம் என்ற வாக்குறுதியுடன் மத்தியில் ஆட்சியை கைப்பற்றிய காங்கிரஸ் கட்சி இதுவரை ஏழைகளின் நல் வாழ்வுக்காக எந்த நடவடிக்கையையும் எடுத்தது கிடையாது.

மாறாக எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தி ஏழை மக்களின் வாழ்வில் பெரும் சுமையைத் தான் காங்கிரஸ் இறக்கிவைத்துள்ளது.

அவர்கள் அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் காகிதத்தில் மட்டும்தான் இருக்கிறது. பா.ஜகவை ஊழலோடு தொடர்புபடுத்திப் பேச காங்கிரஸுக்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை.

ஏனெனில் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் நடைபெறும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் அமர்ந்த நாளில் இருந்தே ஊழல் தொடர்பான செய்திகள் வெளியாகிக் கொண்டே வருகின்றன.

பல இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செய்துள்ள காங்கிரஸுக்கு கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கொண்டு அடுத்தவர் மீது கல்லை எறியக் கூடாது என்ற பொது அறிவு கூடத் தெரியவில்லை.

காங்கிரஸ் கட்சியின் ஊழல்கள் பூலோகத்தையும் கடந்து ஆகாயம் (அலைக்கற்றை), பாதாளம் நிலக்கரி சுரங்கம் என மூன்று லோகத்திலும் சிறகு விரித்து வியாபித்துள்ளன.

தென் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் முதன்முறையாக ஆட்சியை அமைத்த பா.ஜ.க இந்த மாநிலத்தின் மேம்பாட்டிற்காக பல நல திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. எங்கள் கட்சிக்குள்ளே சில வேற்றுமைகள் தோன்றிய போதும் அது மாநில வளர்ச்சியை என்றுமே பாதித்தது கிடையாது.

காங்கிரஸ் கட்சியினர் இடையே ஒற்றுமை என்பது அறவே இல்லை. முதல் மந்திரி பதவிக்குரிய வேட்பாளர் யார் என்று அறிவிப்பதில் கூட அக்கட்சியினரிடையே பல வேற்றுமைகள் உள்ளன. ஏனென்றால் காங் கிரஸ் கட்சியில் முதலமைச்சர் பதவிக்கு பலரும் முண்டியடித்து போட்டிபோட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் கட்சியில் எல்லா தலைவர்களும் ஒற்றுமையாக இருக்கிறோம். எங்களுக்குள் எந்த வேற்றுமையும் கிடையாது. அதனால் பா.ஜ.கவின் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக ஜகதீஷ் ஷெட்டரின் பெயரை நாங்கள் ஏற்கனவே அறிவித்துவிட்டோம் என குறிப்பிட்டுள்ளார். (அ-5)

## சீனாவின் ஊடுருவல் குறித்து பேச்சுக்கள் மூலமே தீர்வு

இந்திய எல்லைக்குள் சீன மக்கள் விடுதலை இராணுவம் ஊடுருவியுள்ள விவகாரம் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்கப்படும் எனவும் இப்பிரச்சினையை பெரிதுபடுத்த விரும்பவில்லை எனவும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே பிரதமர் மன்மோகன்சிங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் விளக்கமளிக்கையில்,

இந்திய எல்லைக்குள் சீன இராணுவ வீரர்கள் ஊடுருவி முகாம்களை அமைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என நம்பிக்கை உள்ளது. தேவையில்லாத நடவடிக்கைகள் மூலம் பிரச்சினையை மேலும் சிக்கலாக்க விரும்பவில்லை என குறிப்பிட்டுள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்துகொள்.
~ ஓர்அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கறையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருக்க திருவுளமோ?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது விடுதலைப்புலிகளின் அரசியல் பயணத்தின் அடிப்படையானது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இராணுவப் பலம் பற்றிச் சிந்திக்கின்றாரே தவிர, அரசியல் பக்கம் பற்றி சிந்திக்கவில்லை என்ற விமர்சனங்கள் தமிழ்ப் பற்றுடையார் பக்கமாக எழுகை பெற்றது.

ஒரு காலத்தில் பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்கள் எவரும் போட்டியிடக்கூடாது என்ற முடிவில் இருந்த விடுதலைப் புலிகள் அந்த முடிவை மாற்ற வேண்டிய தேவைக்குட்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் மாற்றுச் சிந்தனையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது.

தமிழரசுக் கட்சியுடன், முன்னாள் போராளிக் குழுக்களாக இருந்து அரசியல் நீரோட்டத்தில் சங்கமித்த சில தமிழ் அரசியல் கட்சிகளையும் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியதால், விடுதலைப் புலிகள் எதிர்பார்த்த அரசியல் இராஜதந்திர வியூகங்கள் வெற்றி பெற்றன என்று சொல்ல முடியாது போனாலும் புலிகள் சுடுவார்கள் என்று, கொழும்பிலும் இந்தியாவிலும் அஞ்ஞாதவாசம் இருந்த தமிழ் அரசியல்வாதிகள் அச்சம் களைந்து வெளியில் தலை காட்டலாயினர்.

இந்த நிம்மதியை வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதயம் பாராளுமன்றப் பதவிகளையும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு வழங்கிக் கௌரவிக்கலாயிற்று.

விடுதலைப் புலிகள் தோல்வியுற்ற பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது சிருஷ்டிப்பின் நோக்கத்தை மறந்து போனதுடன், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவும் தலைப்பட்டது.

குறிப்பாக கூட்டமைப்பின் தலைவர் தனது சுய விருப்பத்தை நிறைவேற்றத் தலைப்பட, அடுத்த தேர்தலில் தமக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும் என்ற பயத்தால் ஏனையவர்கள் மௌனித்து நின்றனர்.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் தாவும் அளவில் நிலைமை மாறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியில், ரணில் விக்கிரமசிங்கவால் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

இந்தச் சம்பவம் நடந்த பின்பும் வன்னியில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளது. அவ்வாறாயின் யார் எந்தப் பக்கம் நிற்கிறார்கள். எதுவுமே புரியவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. கறையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருந்த கதையாகத் தான் நிலைமையுள்ளது.

பாவம் தமிழர்கள். கருநாகத்துக்கு பால் வைக்கிறார்கள். கறையான் புற்றைப் பாதுகாப்பதாக நினைத்து.

# மன்னாருக்குச் சென்ற ரணில் ஆயருடன் சந்தித்துப் பேச்சு

(மன்னார்)

மன்னாருக்கான விஜயத்தை மேற்கொண்ட எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்தனர். இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது மன்னார் நகர சபை, மன்னாரில்பிரஜைகள் குழு, தேசியமீனவ ஒத்துழைப்பு பேரவை, காணாமல் போன உறவுகளை தேடும் குடும்பங்களின் அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் காணாமல் போனவர்களின் உறவினர்களும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் பல தரப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்ட நிலையில் மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் காணாமல் போனதாக கூறப்படும் சுமார் 472பேருடைய விபரங்களை காணாமல் போன உறவுகளை தேடும் குடும்பங்களின் அமைப்பின் தலைவி, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார்.

குறித்த சந்திப்பின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப், மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அன்டனி விக்டர் சோசை, ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்த்தனா, ரவி கருணாநாயக்க, திஸ்ஸ அத்தநாயக்க, கொழும்புமேயர்ஏ.ஜே.எம்.முசம்மில், மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்கள் முஸ்லிம் மத பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

இதனைத் தொடர்ந்து மன்னார் நகர சபை மண்டபத்தில் பொதுக்கூட்டம் இடம் பெற்றது. இதன்போது மீனவ சங்க பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்கள், மாதர் மற்றும் கிராமசங்க பிரதிநிதிகள், வர்த்தகர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள், விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக குறித்த குழுவினருக்கு தெரியப்படுத்தினர். (எ-8)

# கொழும்பில் ஊர்வலம்

(கொழும்பு)

கொழும்பில் நடந்த இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக இடம்பெற்ற ஊர்வலத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்து அண்மைக்காலமாக கடும் போக்கு பௌத்த அமைப்புக்கள் மேற்கொண்டு வரும் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த ஊர்வலம் இடம்பெற்றுள்ளது.

இந்த இனவாதத்துக்கு எதிரான ஊர்வலத்தை சர்வதேச சதி என்று கூறி இளைஞர் குழு தடுக்க முற்பட்டபோது, அவர்கள் பொலிஸாரால் கலைக்கப்பட்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னர், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று மனிதவுரிமை ஆர்வலர்கள்குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் சர்வதேச நாடுகளும் இலங்கை அரசாங்கத்தின் மீது கடுமையானஅழுத்தங்களை பிரயோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# தொடர் போராட்டத்திற்கு லெனினிச கட்சி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இராணுவ தேவைக்காக தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதனை எதிர்த்து இன்று தொடக்கம் இடம்பெறவுள்ள தொடர் போராட்டங்களுக்கு புதிய – ஜன நாயக மாக்சிச – லெனினிசக் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளதோடு சகல தரப்பினரையும் பங்கு கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அக் கட்சியின் வட பிராந்திய செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகளை இராணுவத் தேவைக்காக சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் அந்தக் காணிகளில் கடந்த 22ஆம் திகதி ஒட்டப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து தொடர் போராட்டங்ளை நடத்துவது என அப்பகுதி மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்து முடிபெடுத்துள்ளன.

இதன் பிரகாரம் இன்று காலை 8 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக இந்தத் தொடர் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.

எனவே அனைவரும் இந்தப் போராட்டத்தில் பங்குகொள்ள வேண்டும் எனத் தெரிவித்ததோடு தமது கட்சியும் பூரண ஆதரவு வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# திருமண மண்டப திறப்பு விழா

(கோண்டாவில்

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருக்கோயில் திருமண மண்டபத் திறப்பு விழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தில்லையம்பதி பரிபாலனசபைத் தலைவர் தம்பிஜயா ராதா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் துறைப் பேராசிரியருமான என்.சண்முகலிங்கன், யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட ஆசிரியர் திருமதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

திருப்பணிச் செல்வர் முத்தன் இராசன் அவர்களின் புதல்வன் திரு.திருமதி பிரபாகரன் குடும்பத்தினரின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் இம்மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## நமது சகோதரர்கள்



பெரும்பாலான நாடுகளில் சட்டங்களாலேயே குற்றங்கள் தோன்றுகின்றன; பெருகுகின்றன. அக்குற்றங்களைக் குறைக்க மேலும் சட்டங்கள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. சட்டங்களே மனிதர் வாழ்வைப் பாழாக்கும் மாயக்கருவிகளாக இருக்கின்றன. சமுதாயமே தனி மனிதர் குற்றங்களைச் செய்யக் காரணமாகின்றது.

எந்தச் சமுதாயம் தனி மனிதன் குற்றத்திற்குக் காரணமோ அதுவே தனி மனிதனைத் தண்டித்துக்கொண்டே இருக்கின்றது. நீதி எங்கே? சட்டம் எங்கே? குற்றம் எங்கே? தண்டனை எங்கே?

இந்த அலங்கோலத்திற்குக் காரணம் என்ன? ஜனநாயகம் என்ற போர்வையில் அரசியல்வாதிகள் என்ற முத்திரையில் சுயநலமிகள் குழுவினர் குழுவினராக இணைந்து ஆட்சியை மாறி மாறிக் கைப்பற்றி மக்களைக் காயாடும் ஒரு சூதாட்டம் நடத்துவதே.

உத்தமர்கள் நிர்வாகத்தில் ஆட்சி நிலை பெற முடியாமலும் உத்தமர்கள் ஆட்சியிலே பங்கெடுத்துக்கொள்ளமுடியாமலும் சுயநலமிகள் புரியும் தந்திரங்கள் எவ்வளவு? இந்த நிலைமையில் இத்தகைய அரசியல்வாதிகளை அவர்கள் கொண்டுள்ள ஆட்சிப்போதை என்ற மயக்கத்திலிருந்து மக்கள் தாமே விடுபடவேண்டும். ஆட்சிப்போதை என்ற வெள்ளம் அவர்களைத் தாண்டி அடித்துச் செல்கின்றது.

வாருங்கள் சகோதரர்களே! வாக்குரிமை என்ற கருவியைச் சரியாகப் பயன்படுத்தி வெள்ளம் புறப்படும் இடமாகிய மதகை அடைத்து ஆட்சிப்போதை கொண்ட அரசியல்வாதிகளையும் அவர்களைத் தொடர்ந்து ஆபத்தில் சிக்கித் தவிக்கும் மக்களையும் நாமேதான் மீட்கவேண்டும்; ஏனெனில் அவர்கள் அனைவரும் மனித இனம்; நமது சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன ஆயுதங்களை நாம் பயன்படுத்தவில்லை

## சிரியா மறுப்பு

(டமாஸ்கஸ்)

சிரிய ஜனாதிபதி ஆசாத் அரசுக்கு எதிராக உள்நாட்டுப் போர் 2 வருடங்களாக நடந்து வரும் நிலையில் இப்போரில் சிரிய இராணு வம் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி போராட்டக்காரர்களை யும் சிரிய மக்களையும் கொன்று குவித்ததாக அமெரிக்காவும் லண டனும் குற்றம் சுமத்தியுள்ளன.

இதனையடுத்து ஐக்கிய நாடுகளின் குழு இரசாயன ஆயுதப் பயன்பாடு குறித்து விசாரணை நடத்த சிரியா ஒப்புதல் அளிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான்கீ மூன் கேட்டுக்கொண்டுள்ளார்.


எனினும் இந்தக் குற்றச்சாட்டை சிரியா முற்றாக நிராகரித்துள்ளது. இது குறித்து சிரியாவின் தகவல் தொடர்புத்துறை மந்திரி உமர் அல் சோபி தெரிவிக்கையில்,

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை மந்திரி மற்றும் லண்டன் கூறியிருக்கும் குற்றச் சாட்டு உண்மைக்குப் புறம்பானது. அது அப் பட்டமான பொய் என்பதை முதலில் உறுதி செய்ய விரும்புகிறேன்.

சிரியா இரசாயன ஆயுதங்க ளைப் பயன் படுத்தியதே இல்லை. சர்வதேச போர்ச் சட்டம் மற்றும் விதிகளை நாங்கள் முழுவதுமாக ஏற்றுக்கொண்டுள்ளோம். அது மட்டுமில்லா மல் மனிதநேயம் மற்றும் தார்மீக அடிப்படை யிலும் சிரியா அவற்றைப் பயன்படுத்திய தில்லை எனவும் இரசாயன ஆயுதப் பயன் பாடு குறித்து விசாரணை நடத்த அமெரிக்கா மற்றும் லண்டன் அனுப்பப்படும் ஐக்கிய நாடு களின் குழு மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (அ-5)

# சீன இராணுவம் வெளியேறும் வரை குர்ஷித் சீனாவுக்கு செல்லக் கூடாது

## பா. ஜ. க. கோரிக்கை



சீன இராணுவம் இந்திய எல்லையிலிருந்து வெளியேறும் வரை சீனாவுக்கான பயணத்தை குர்ஷிக் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மாநில லடாக் பகுதியில் உள்ள தெப்சாங் பள்ளத்தாக்கிற்குள் இரு வாரங்களுக்கு முன் சீன இராணு வம் அத்துமீறி நுழைந்தது. இராணுவ நடமாட்டத்தைக் கண்ட இந்தியா அங்கிருந்து வெளியேறுமாறு சீனாவிற்கு வேண்டுகோள் விடுத்து வருகின்றது.

இந்நிலையிலேயே புதுடில்லியில் நடைபெற்ற மாத்ரி ஸ்ரீ விருது வழங்கும் நிகழ்ச்சி ஒன்றில் பாரதிய ஜனதா தலைவர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்ட போதே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

லடாக் பகுதியில் சீனா அத்துமீறி ஊடுரு வியிருந்தும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் அங்கு பேச்சு வார்த்தைக்கு செல்லவுள்ளார்.

இது மிகவும் கவலையளிக்கின்றது. எனவே சீனாவுடன் பேச்சுவார்த்தைக்கு செல்வதை பிரதமர் தலையிட்டு உடனடியாக தடுத்து நிறுத்த வேண் டும் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தியப் பகுதியிலிருந்து சீன இராணு வம் வெளியேறுகிறவரை பீஜிங்கிற்கு எந்த விதப் பயணமும் மேற்கொள்ளக் கூடாது. கடந்த 2010 ஆம் ஆண்டு இந்தியா- திபெத் எல்லை பொலிஸாரின் கண்காணிப்பில் விடப்பட்ட அப்பகுதிகளை மீண்டும் இராணு வத்தின் வசம் ஒப்படைக்க வேண்டும். நாடு மிக மோசமான விளைவுகளை சந்தித்து வரும் வேளையில் காலதாமதமின்றி இவை உடன டியாக நிறைவேற்றப்பட வேண்டும் என தெரி வித்துள்ளார். (அ-5)


## இத்தாலியின் பிரதமராக லெத்தோ பதவியேற்றுள்ளார்



இத்தாலியில் 2 மாதங்களுக்கு முன் பொதுத் தேர்தல் நடந்தது. இதில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காமையால் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ் கோணியின் மக்கள் விடுதலைக் கட்சிக்கும் என்றிக்கோ லெத்தோவின் ஜனநாயக கட்சிக்கும் இடையே கூட்டணி ஆட்சி ஏற்படுத்துவது என்று ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதையடுத்து 2 மாத தேக்க நிலைக்கு முடிவு ஏற்பட்டது. புதிய பிரதமராக ஜனநாயகக் கட்சி தலைவர் என்றிக்கோ லெத்தோ தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் நேற்று இத்தாலி பிரதம ராக பதவி ஏற்றார். ஜனாதிபதி நெப்போலி டேனா புதிய பிரதமருக் கும் மந்திரிகளுக்கும் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். (அ-2)




அரசு முறைப் பயணமாக தென்கொரியா சென்றுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை இணையமைச்சர் வில்லியம் பேர்ன்ஸ், தலைநகர் சியோலில் வெளியுறவுத்துறை அமைச்சர் யன்யங் செவை சந்தித்து உரையாடிய போது...

# மரண அறிவித்தல்கள்

## குமாரு வைரவநாதர்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

யா/இணுவில் மத்திய கல்லூரி (வைத்திலிங்கம் வாத்தியார்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட குமாரு-வைரவநாதர் 27.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரு-வள்ளிப்பிள்ளையின் மகனும், காலஞ்சென்ற நடராஜா-கண்மணியின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், தேவபாலன்(லண்டன்), அமரர் சிவபாலன், தேன்மொழி, ஜெயபாலன்(ஜேர்மனி), தேவகி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி(லண்டன்), சிவயோகம், சோதிலிங்கம் (பிரதி அதிபர், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ரதி (ஜேர்மனி), வின்சன்ட்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், ஜனனி வில்லியம்ஸ்(லண்டன்), தீபன்(லண்டன்), நிதன் (லண்டன்), வியாபகன், சிந்து(நுண்கலைப் பீடம் -மருதனார்மடம்), அலைமகள்,சிவகங்கா,கோகிலன் (ஆசிரியர், பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி), இராகுலன்(B.Sc), ஜதுகுலன்(தொழில்நுட்ப பயிலுநர்- கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி), அகிலா, வரகுலன், நிதர்சன்(ஜேர்மனி) நாவேந்தன் (ஜேர்மனி), லேயா(லண்டன்), லோய்ஸ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், சப்றோன் மாயாவின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.04.2013 இன்று காலை 10 மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(2485)

தகவல் : சோ.கோகிலன்(பேரன்)
பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)

## அப்பையா கனகராஜா



கோண்டாவில் கிழக்கை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா கனகராஜா அவர்கள் 27.04.2013 சனிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் கனகராஜா புஸ்பராணி (விவசாய ஆராய்ச்சித் திணைக்களம்) அவர்களின் அன்புக் கணவரும், லிசாந்தினி சதீபன் (விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்), பமிலா (முதலாம் வருட மாணவி யாழ்.பல் கலைக்கழகம்), ரேவதி ( யாழ். கோண் டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் குணநாதன், சதீபன் அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.04.2013 இன்று திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இல.: 078 9990422

தகவல்:
குடும்பத்தினர்

(சி-3130)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமிலிருந்து ...

கடந்த 11 நாட்களாக உண்ணாநிலை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களும் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

செங்கல்பட்டு மற்றும் பூவிருந்தவல்லி முகாமில் சுமார் 46 பேர் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர். இப்படி அடைக்கப்பட்டிருப்பவர்கள் தங்களை விடுவிக்ககோரி அடிக்கடி போராட்டம் நடத்தி வந்துள்ளனர். தங்கள் மீதான வழக்குகளை விரைந்து நடத்தி முடிக்க வேண்டும் என்றும் தங்களை இந்த முகாம்களிலிருந்து விடுவித்து வழமையான அகதிமுகாம்களில் இருக்கும் தத்தம் குடும்பத்தினருடன் வாழ அனுமதிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரி வருகின்றனர்.

பொலிஸாரோ இவர்கள் தொடர் கண்காணிப்பில் வைக்கப்படவேண்டியவர்கள் என்றும் இவர்களை இந்த உயர் பாதுகாப்பு முகாம்களை விட்டு வெளியில் விடமுடியாது என்றும் வாதாடி வருகின்றனர்.

பல்வேறு போராட்டங்களின் விளைவாக சில அகதிகள் சிறப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டுமுள்ளனர். ஆனால் மேலும் பலர் அங்கே அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே சசிதரன் என்பவர் நேற்றுக் காலை நஞ்சருந்தியிருக்கிறார். தனது கோரிக்கைகள் ஏற்கப்படாததால் வேறு வழியின்றியும் தான் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்ததாக சசிதரன் கடிதம் எழுதி வைத்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

அவரது உயிருக்கு ஆபத்தில்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-8)

## ...ஸ் குடை ...

மொனராகலை, வெலியாய பிரதேசத்தில் நேற்று மாலை 5.10 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மொனறாகலை சிரிகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமானதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்

இந்த படைச் சிப்பாய்கள் தியத்தலாவ இராணுவமுகாமில் கடமையாற்றுபவர்கள் என தெரிய வந்துள்ளது. (எ-8)

# கொல்கத்தாவை வீழ்த்தி சென்னை முதலிடம் பிடித்தது

மைக்கல் ஹசியின் அதிரடி ஆட்டத்தினால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் 14 ஓட்டங் களால் வெற்றியை ஈட்டியது.

6-வது ஐ.பி.எல். தொடரின் 38-வது போட்டி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் அரங்கில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமானது.

இதில் உள்ளூர் அணியான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொல் கத்தா முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மா னித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 200 என்ற இமாலய ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் ஹசி 95 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

201 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணியால் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதன்காரணமாக சென்னை அணி 14 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றது.



போட்டியின்நாயகனாக சென்னை அணியின் மைக்கல் ஹசி தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் கிடைத்த 2 புள்ளிகளினால் சென்னை அணி தனது புள்ளிக் கணக்கை 14ஆக அதிகரித்து முதலிடத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

| இன்றைய போட்டிகள் |
|---|
| ராஜஸ்தான் எதிர் பெங்களூர் மாலை 4 மணி |
| மும்பை எதிர் பஞ்சாப் இரவு 8 மணி |

## குரோதங்களை...

இனவாதம் தோன்றுவதற்கு முன்னர் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்றார்.

இதன்போது நிகழ்வை திசை திரும்பும் வகையில் சிலர் இந்த பேரணியினுள் நுழைந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். இதையறிந்த ஏற்பாட்டுக் குழு அவைகளை வாங்க வேண்டாம் என அறிவுறுத்தினர்.

இதனையடுத்து குறித்த கும்பலை பொலிசார் அவ்விடத்திலிருந்து விரைவாக விரட்டியமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## சிகிச்சை ...

யாழ். மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் காரைநகர் வீதியில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி விபத்தில் காயமடைந்த மானிப்பாய் மேற்கைச் சேர்ந்த சிறீதரன் ஜீவகரன் (வயது-20) என்ற இளைஞனே சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இவருடன் காயமடைந்த சங்கானையைச் சேர்ந்த யேசுநாதன் ரட்ணம் (வயது-34) என்பவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எ-6)

# புனேயை வீழ்த்தி டில்லி 2-வது வெற்றி

ஐ.பி.எல் கிரிக்கெட்டின் 39 வது லீக் போட்டி நேற்று இரவு 8 மணிக்கு சத்தீஷகர் மாநிலம் ராய்ப்பூரில் நடைபெற்றது. இப்போட்டியில் கடைசி இரண்டு இடங்களில் இருக்கும் டில்லி டேர்டெவ்ஸ்-புனே வாரியர்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற புனே அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

அதன்படி டில்லி அணியைச் சேர்ந்த ஜெயவர்த்தன -சேவாக் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ஜெயவர்த்தனே 12 ஓட்டங்களிலும் சேவாக் 25 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். அதன்பின் வந்த வோர்னர் 25 பந்தில் 51 ஓட்டங்கள் அடிக்க டில்லி அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்கள் எடுத்தது.

165 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் புனே வாரியர்ஸ் அணி களம் இறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் உத்தப்பா - பின்ச் சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். இருவரும் தலா 37 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தனர். அதன்பின்னர் வந்தவர்கள் சொதப்பியதால் புனே வாரியர்ஸ் அணியால் 149 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

இதனால் டில்லி அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டெல்லி அணி பெற்ற இரண்டாவது வெற்றி இதுவாகும்.

யுவராஜ் 31, ரைட் 19 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். சிமித் 17 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.


## இலங்கையை ...

பொதுநலவாய அமைச்சரவை நடவடிக் கைக் குழுவில் இந்தியா அங்கம் வகிக்கவில்லை.

ஜெனிவா தீர்மானத்தை அடுத்து இந்திய-இலங்கை உறவுகள் நல்லநிலையில் இருக்கவில்லை. அத்துடன் இழுபறி நிலையில் இருந்து வந்த இந்திய-இலங்கை கூட்டுத்திட்டமான சம்பூர் அனல்மின் நிலையத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (எ-8)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை செல்வராசா



நயினாதீவு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது முள்ளி வீதி அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான வேலுப்பிள்ளை செல்வராசா 28.04.2013 நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா பூமாலட்சுமி தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் (சின்னக்கிளி) அன்புக் கணவரும், சதாசிவத்தின் ( சதா) அன்புச் சகோதரனும், பவானி, காலஞ்சென்ற நாகம்மா (புஷ்பம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பூவிலிங்கத்தின் சகலனும், செல்வகுமார் (கண்ணன்), யோகவதனி(சுவிஸ்), நவக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தரூபி, சுரேஸ் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சிந்துஜா, கபிசனா, அனுஷா (சுவிஸ்), சுஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.04.2013 (செவ்வாய்க் கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப் பாத்தி மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

35, முள்ளி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். தொ. இல. : 0214900728

தகவல்: குடும்பத்தினர்

(சி-3133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பை ...

பட்ட கட்சியாக தமது கூட்டமைப்பு அமைய வேண்டுமென்று மற்றக் கட்சிகள் சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்துள்ளன.

ஒற்றுமையை வலியுறுத்தியே இதுவரை காலமும் தாம் காத்திருந்ததாகவும் ஆனால் எதிர்வரும் இரண்டு வாரத்திற்குள் தமது கட்சிகளுக்கிடையில் ஒருமித்த கருத்து சாத்தியப்படாவிட்டால் நான்கு கட்சிகள் மட்டும் தனித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரெலோ இயக்கத்தின் தலைவர் கூறினார்

ஏனைய சக கட்சிகளும் இந்த விடயம் தொடர்பில் தமது மத்திய குழுக்களைக் கூட்டி முடிவெடுத்த பின்னர்.பதிவு விடயம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-8)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் ஆங்கில இலக்கிய (Eng.lit.) ஆசானும் எமது நிறுவன ஸ்தாபகர்களில் ஒருவருமான திரு.எஸ்.சுந்தரமூர்த்தி அவர்களது பாசமிகு தமையனார்

### திரு.சதாசிவம் நரேந்திரன்

*(Retired Staff Technical Officer. University of Jaffna)*

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! !*

கல்விச் சமூகம்
*Raveens E.M.C*
கரவெட்டி.

(C-3125)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.ஹற்றன் நஷனல் வங்கியில் கடமையாற்றும் செல்வி ச.தேவரஜனி அவர்களின் அன்புத் தாயார் 27.04.2013 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிக்கின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.ச.பே. நாகரெத்தினம்
கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
147,149,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3126)

## மரண அறிவித்தல்

### Dr.யோகீஸ்வரி சிவபாதம் (பவளம்)

(குகன் வைத்தியசாலை, மல்லாகம், கொல்லன்கலட்டி, மலப்பை – சுன்னாகம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.யோகீஸ்வரி சிவபாதம் (பவளம்) அவர்கள் 24.04.2013 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் Lion Dr.ஆறுமுகம் சிவபாதம் அவர்களின் அன்பு மனைவியும், மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் செல்வநாயகியின் அன்பு மகளும், ஆறுமுகம் மங்கையற்கரசியின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னார் Dr.சுகந்தினி (சிங்கப்பூர்), மயூரன்(லண்டன்),சியாமளா (கொழும்பு), யசோதினி (ஜனசக்தி இன்சூரன்ஸ்-கொழும்பு), பகீரதி(லண்டன்), பகீரதன் (ஆசிரியர், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,கொழும்பு-04), பத்மநேசன் (விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம்,கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான வாகீஸ்வரி (மலேசியா), உமாமகேசன்(சொக்கர்), அம்பிகைபாகன்(சந்திரன்), பஞ்சாட்சரம்(அப்புச்சி), மற்றும் ஜெகதீஸ்வரி(பேபி),தனநாயகம்(அப்பு)(பசன்பார்க், சுன்னாகம்), ஜெயலட்சுமி(ஜெயம்), (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலிங்கம் (கனடா), தெய்வநாயகி (பாப்பா), தம்பாப்பிள்ளை (நபீபியா), செல்வலட்சுமி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மக்கள் வங்கி) மற்றும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்,இராசதுரை, சின்னத்தங்கம் ஆகியோரின் மைத்துனியும், ஆதித்யன், அனந்திதா, பரணீதன்,பிரவீணா, ஆராதனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 30.04.2013 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா லேன், மல்லாகம்.
0212240779,
00447734945426 (லண்டன்-மகன்)

தகவல்: குடும்பத்தினர்

(2483)


## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

**Spoken English With Grammar - Quick Learning Course**

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**Diploma / Advanced Diploma in English**

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என்பன விரிவாகக் கற்பிக்கப்படும்.

**IELTS - British Council B1 - Exam City & Guilds**

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia மற்றும் UK செல்ல உள்ளவர்களுக்கு ஏற்றது.

**A1 Exam - Sponsor/Settlement Visa**

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commissionனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**Young Learners for English (YLE)**

வயதெல்லை 7 - 12 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேச பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch I - 29.04.2013 Batch II - 04.05.2013 Batch III - 06.05.2013 Batch IV - 11.05.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road,
Jaffna.
Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane,
Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074


## அந்தியேட்டி அழைப்பு



31.03.2013 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு சபாபதி - சீதேவி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 30.04.2013 செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சபிண்டிகிரியையிலும் நண்பகல் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பண்டிக்கண்டன், கெருடாவில் வடக்கு,*
*தொண்டைமானாறு.*

தகவல் : குடும்பத்தினர்

(C-3128)


## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-3073)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org